# தொழில்

**INDUSTRY**

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்

OF THE
2 FEB

புதிய
25
காசு

PHONE : 4305 GRAMS : "GOODHEART"

# MURLIMAL SANTRAM & CO.,

## (MADRAS) PRIVATE LTD.,

GOVERNMENT CONTROLLED STOCKISTS OF
STEEL & PIPES

13, Sembudoss Street, MADRAS-1.

★

Pipes available from Ready Stock,

GALVANISED, BLACK AND STEAM QUALITY

PIPES ½" TO 6" FROM

TATA / S & L AND BEST IMPORTED, AND ALSO

PIPE FITTINGS IN ALL SIZES.

CONTACT FOR REQUIREMENTS.

# "ஜீப்" மார்க்கு

1057

## எலக்ட்ரோ பிளேட் சாமான்கள்

அனுபவமும் பிரசித்திப் பெற்றதுமான

**கிரேட் ஈஸ்டர்ன் கமர்ஷியல்**

**கார்ப்பரேஷன் லிமிடெட்டாரால்**

தயாரிக்கப்பட்ட

பித்தளை, ஸ்டீல், நிக்கல் சாமான்களின் மீது கியாரண்டியான வெள்ளி, நிக்கல், குரோமியத்தால் உத்திரவாதமான எலக்ட்ரோ பிளேடிங் செய்யப்பட்ட தாம்பூலத்தட்டு, ஆப்பிள் டிசைன் பௌடர் பெட்டிகள், டீ செட்டுகள், ஸ்பூன்கள், டேபிள் போர்க்கு, சகலவித ஸ்பூன்கள், குருவெட் செட்டுகள், பலவித தட்டுகள், டிரேக்கள் அநேக ரக சிகரெட் கேஸ்கள், ஐஸ் கிரீம் ஸ்பூன்கள், கத்திகள், மற்றும் பலவித நூதன அழகான ரகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

★

# S. C. SHAH

9, BUNDAR ST., MADRAS-1

# பிளாக்குகள் ?

ஆப்டோன், லைன், மூவர்ண பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள திறமையாயும், நீண்டகால
அனுபவத்தின் பேரிலும் தயாரிப்பவர்கள்.

"தொழில்" பத்திரிகையில் காணும் பிளாக்குகள்
யாவும் சன்பிராஸஸில் தயாரித்தவையே!
உங்கள் தேவைக்கு அணுகுங்கள்

808365

## சன் பிராஸஸ்

**220/221, வால்டாக்ஸ் ரோடு,**

**சென்னை-3.**



Phone : 31738 Grams : MARIGOLD

## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ராப்பர் 4-வது பக்கம் (மூன்று கலர்) | 150—0—0 |
| ,, ,, (இரண்டு கலர்) | 85—0—0 |
| ராப்பர்உள் பக்கம் ஒரு கலர் | 50—0—0 |
| சாதாரண முழு பக்கம் | 40—0—0 |
| ,, ½ பக்கம் | 25—0—0 |
| ,, ¼ பக்கம் | 15—0—0 |

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு
அட்வர்டைஸ்மெண்ட் மானேஜர்,
**"தொழில்"**
**55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.**

# தொழில்

## இந்த இதழில்

1—2—59


அறிமுகம் ... 4
உணவும், காகிதமும் ... 5
இந்திய விருந்தினர் இருவர் ... 7
இரண டாக்டர் கதை ... 8
கைத்தொழில்முறைகள் ... 10
வேடிக்கை? ... 14
ஓங்கும் தொழில் (கவிதை) ... 16
தொடர் நாவல் :
இதுதான் காதல் ... 17
சிறு கதைகள் :
பண்பு ... 33
வட்டியும் முதலும், பேசாமடந்தை
சினிமா விமர்சனம் ... 58


---

கதை கட்டுரைகளில் வரும் சம்பவங்களும்
பெயர்களும் கற்பனையே

பிரம்பினால், கருத்தைக் கவரும் குடும்ப உபயோகத்திற்கான தட்டு முட்டு சாமான்களை தயாரித்து கீர்த்திப்பெற்றுவரும் ஜெயலக்ஷ்மி அண்கோ என்னும் ஸ்தாபனத்தை மகிழ்ச்சியோடு அறிமுகப்படுத்தி வைக்கிறோம். மேற்படி கம்பெனியார் மேஜைகள், பல தரப்பட்ட நாற்காலிகள், கூடை தினுசுகள், தட்டுகள் முதலியவைகளை கவர்ச்சியான வகைகளில் தயாரித்து எனமல் பூச்சினால் பளபளப்பேற்றி கண்ணையும், கருத்தையும் கவருமாறு செய்துவிடுகின்றனர்.

நம் நாட்டு மக்கள் கைத்தொழில் வளர்ச்சியில் ஆர்வங்கொண்டவர்கள். இயந்திரத்தால் செய்தபொருள்களை விட கைத்திறமையால் செய்யப்பட்டவைகளுக்கு தனி மதிப்புத் தருகிறவர்கள்: இதுபாராட்டவும், மகிழ்ச்சிக்கொள்ளவும் தக்கதாகும் என்பது மிகையல்ல.

படித்தவர்கள், பட்டதாரிகள் ஆகியோர்க்கு உத்தியோகங்களோ, வேறு வித பதவிகளோ உதவலாம். பாமரர்களுக்குப் பலன் தரக்கூடியவை கைத்தொழில்களே! அவற்றுள் மிகச் சிறந்தது பிரம்பினால் தட்டு முட்டு சாமான்கள் தயாரிப்பது. இந்த நல்ல தொழிலில் ஈடுபட்டு பலரின் பாராட்டுதலையும், தொழில் அபிவிர்த்தியில் முன்னேற்றத்தையும் அடைந்து வரும் ஜெயலக்ஷ்மி அண்டு கம்பெனி உரிமையாளர் ஸ்ரீ நடராஜனைப் பாராட்டுவதோடு, அன்னாரின் தொழிலை ஆதரிக்குமாறு வாசக நேயர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறோம். இத்தொழிலை ஆதரிப்பதால் பல ஏழை குடும்பங்களுக்கு உதவியவர்களுமாவீர்கள்.

முகவரி:

**ஜெயலக்ஷ்மி & கோ,**

**பிரம்பு சாமான் தயாரிப்பவர்கள்,**

114, ராயப்பேட்டை ஐரோடு,

**மைலாப்பூர், சென்னை-4.**

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

# தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1 | சென்னை, 1—2—59 | இதழ் 19

## உணவும், காகிதமும்

உணவுப் பொருள்களின் அகவிலைக் கொடுமையை பற்றி நாடு முற்றும் கூக்குரல் ஓங்கியதின் பேரில் அரசாங்கத்தினர் ஓரளவு பரிகாரம் தேடமுற்பட்டுள்ளனர். அரிசி விலையைக் கட்டுப் படுத்தி சில வியாபாரிகளின் கொள்ளை லாப பேரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முற்பட்டுள்ளது பாராட்டத்தக்கதுதான். அரசாங்கத்தின் இத்திட்டம் அமலுக்கு வருமுன் கொள்ளைலாப பேரக்காரர்களான ஒருசில வியாபாரிகள் துரிதமாக ஏழைகளைச் சுரண்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மட்ட ரக அரிசி ரகங்கள் அமித லாபவிலைக்கு விற்கப்படுகின்றன. அரசாங்கத்தினர் தங்கள் திட்டத்தை இயந்திர வேகத்தில் அமலுக்குக் கொண்டு வந்திருந்தால் இந்த இடைவேளைக் கொள்ளை தடைப்பட்டுப் போயிருக்கும்.

பொதுவாக ஜனநாயக அடிப்படையில் மக்களின் மதிப்பைப்பெற்ற அரசாங்கம் நடைபெற உணவுப் பொருள்கள் பஞ்சம் கூடாது. உணவுப் பொருள்கள் பஞ்சத்தை யெடுத்துக் காட்டி அரசியல் எதிரிகள் பாமரர் மனத்தைப் பாழ்ப்படுத்தி வருகின்றனர் என்பது வருந்தத்தக்கதாகும்.

மற்றும், அரசியலி லிருந்து வர்த்தகத்துறை ஈறாக உள்ள அறிவை அடிப்படையாய்க் கொண்ட யாவற்றிற்கும் ஆதாரமான காகிதம் கிட்டாத பொருளாகவே மாறிவிட்டிருக்கிறது. இந்தக் காகிதப் பஞ்சத்தால் பதிப்பகங்கள் பல மூடப்பட்டு விட்டன. மூடப்படவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை யென்ற நிலையில் பல தவித்துக்கொண்டிருக்கின்றன. பத்திரிகைகளின் நிலையோ பரிதாபத்திற் குரியதாய் விட்டிருக்கிறது. பணத்தைப் பெருவாரியாய்க் கொடுத்தாலும் தேவையான காகிதம் கிடைப்பதாய் இல்லை. இது மனித இனத்திற்கு ஏற்பட்டுள்ள பெரியதோர் தீங்கு. அறிவின் அடிப்படையில் வாழும் மனிதன், காகிதத்தை உதாசினம் செய்து விடமுடியாது. மனிதப்பண்பாட்டை காலத்தோடு கணித்துவைக்கத் தேவைப்படும் காகிதப் பஞ்சம் உடனடியாய்த் தவிர்க்கப்படாவிட்டால் அறிவு வேலைகள் பல முடங்கும். கலை, கலாச்சாரம், விஞ்ஞானம், தத்துவம்போன்ற அறிவு சாதனைகள் ஏட்டில் இடம் பெறுமல் மறையும். இந்தப்பற்றுக் குறை நீங்க அரசாங்கம் உடனடியாய் முயற்சிக்க வேண்டியது அவசியம். பற்றுக்குறைகளை நீக்குவதின் மூலம் தான் ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பளிக்க முடியும் என்பது தெளிவு. தென்னுட்டைப் பொறுத்த வரையில் காகித ஆலைகளை சென்னை ராஜ்யத்தில் சீக்கிரமே ஏற்படுத்த ஆவன செய்வது நலம்.

# இந்திய விருந்தினர் இருவர்

அண்மையில் செக் நாட்டுத்தலைவர் மார்ஷல் டிட்டோ இந்தியாவுக்கு தம் மனைவியோடும், மற்றும் தன் பரிவாரத்தினரோடும் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். உலகப் பெருந்தலைவர்களில் ஒருவரும், மலைகுலைந்தாலும் நிலை தவருதவரென்று பகைவரும் பாராட்டும் வீர உள்ளம் படைத்தவருமான மார்ஷல்டிட்டோ இந்தியாவுக்கு வருவது இது முதல் தடவையல்ல. ஆவடியில் நடந்தஅகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டின் போதும் இம்மாபெரும் தலைவர் வந்திருந்தார்! அம்முறை வந்து சென்ற நிலைவேறு. இம்முறை நம் நாட்டுப் பண்பாடுகளில் கலந்தி உறவாடிகளிப் படைந்துத் திரும்பினர் என்பது மகிழ்ச்சிக்குரியதே! நம் நாட்டுப் புராதன சிற்ப சித்திர கலைகளைக்கண்டு ரசித்தார். மதுரை ஸ்ரீரங்கம் ஆலயங்களுக்கு விஜயம் செய்து இறைவனை வழிப்பட்டார். காணிக்கை செலுத்தும் அளவுக்கு அவர் மனம் பரவசப்பட்ட தென்பதை நாம் ஈண்டு குறிப்பிடா திருப்பதற்கில்லை. நாடு, கலாச்சாரம் மாறுபட்டாலும் இறைவனை வழிப்படுதலில் வேற்றுமையில்லை யென்பதை அம்மேதையின் சீரிய நடத்தை மெய்ப்பிக்கிறது. லோகாதயம் ஒங்கியமேல் நாட்டு ராஜதந்திரியின் ஒழுக்க சீலத்தைக் கண்டாவது தமிழ் நாட்டு சூன்யவாதிகளான நாத்திகர்கள் திருந்துவார்களா?

இம்மாபெரும் ராஜதந்திரியை வரவேற்றுக் களித்த நம் நாடு மற்றுமோர் கோமகனை வரவேற்கும் வாய்ப்பைப் பெற்றது மகிழ்ச்சிக்குரியதே! பிரிட்டிஷ் ராணி எலிஜபெத்தின் கணவர் எடின்பரோ கோமகன் நம் நாட்டிற்கு விஜயம் செய்துள்ளது இந்தியா பிரிட்டன் இரண்டு நாடுகளுக்குள்ளே நட்புறவு நீடிக்கச் செய்ய உதவக்கூடியதாகுமென்பது உறுதி. இப்புத்தாண்டில் உலகபெருமக்கள் இருவரை வரவேற்ரும் என்ற வகையில் நாம் மகிழ்ச்சியடைகிரும். இம்மாதிரி தொடர்பில் நம் நாட்டின் கீர்த்தியும், வர்த்தக அரசியல் தொடர்பும் பலப்பட ஏதுவாகும்.

முறைகள்-நோயாளிகளின் துன்பத்தை மட்டுப்படுத்தும் பல புதிய ரண சிகிச்சை முறைகளையும் டாக்டர் பிஸிக் வகுத்தார். நரம்புத் தையல் முறையை முதலில் கையாண்டவர் அவரே. முறிந்த எலும்புகளை விரைவில் ஒட்ட வைப்பதில் வெற்றி கண்டார்.

பென்ஸில்வானிய பல்கலைக் கழகம் டாக்டர் பிசிக் பெயரால் அறுவை மருத்துவக் கல்விப்பிரிவு ஒன்று நிறுவியது. மற்றும் பல பெரும் சிறப்புகளும் அவரைத் தேடி வந்தன. அவர் அவற்றைப் பணிவுடன் ஏற்றுக்கொண்டபோதிலும் ரண சிகிச்சை இல்லாமல் நோய்களைக் குணப்படுத்துவதே உண்மை வெற்றி என்றும் அவர் வாதித்தார்.



பிலடல்பியாவிலுள்ள பென்ஸில் வானிய மருத்துவ மனையில் ரண வைத்தியப் பிரிவை ஏற்க வருமாறு டாக்டர் பிசிக்குக்கு அழைப்பு வந்தது. ஆனல் மீண்டும் பிலடல்பியாவில் டாக்டர் பிஸிக் கால் வைக்கையில்வறுமை பற்றிக் கொண்டது நோயாளிகள் வரவில்லை;

புதிய வைத்தியக் கருவிகள் தயாரிப்பதில் டாக்டர் பிஸிக் முனைந்தார். கண் நோய் ரண சிகிச்சைக் கருவி, வயிற்றுப் பீச்சாங்குழல், தொண்டைச் சதை அகற்றும் கருவி உள்பட பல புதிய கருவிகளை அவர் தயாரித்தார். இன்றுகூட இக் கருவிகள் புழக்கத்தில்உள்ளன.

# இங்க் வகைகள்

—[கே. ஜி. ராஜு]—

## இங்க் வகைகள் புளூபிளாக் இங்க் பவுடர்

Ferrous Sulphate (Dry Powder)
பெர்ரஸ் ஸல்பேட் உலர்ந்த தூள் 7 அவுன்ஸ்,
Gallic Acid
காலிக் அமிலம் 7 ,,
Tannic Acid
டானிக் ஆசிட் 1 ,,
Indigo
இண்டிகோ 12 ,,
Dextrine
டெக்ஸ்ட்ரைன் 2 ,,

### செய்பாகம்

இவைகளை ஒன்றுய்க் கலந்து கொள்ளவும்.

## சிகப்பு இங்க்

Erithrosin
எரித்ரோஸின் 2 அவுன்ஸ்
Sugar Powder
சுகர்பவுடர் 8 ,,
Dextrine
டெக்ஸ்ட்ரைன் 8 ,,

### செய்பாகம்

இவைகளை ஒன்றுய்க் கலந்து கொள்க.

### இங்க் மாத்திரை

Nigrosin நிக்ரோஸின் $\frac{1}{2}$ ட்ராம்
Carb Soda கார்ப்சோடா 7 கிரேய்ன்,
Tartaric Acid
டார்டாரிக் ஆசிட் 8 ,,

Gum Arabic
கம் அராபிக் 6 ,,

செய்பாகம்

இவைகளைப்போதுமான தண்ணீர் விட்டுக் கலந்து கொள்ளவும் மாத்திரைகளாக்கும்போது இளஞ்சூடான தண்ணீர் கலந்து கொள்ளவும்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் ராணி எலிஜபெத்தின் கணவர் எடின்பரோ கோமகன். (2—1—59) விமான மார்க்கமாய் விஜயம் செய்தார்.

---

## குடியரசு தின விழா

இந்தியக் குடியரசின் 10-வது ஆண்டு விழாவை நாடு முற்றும் கோலாகலமாய்க்கொண்டாடப் பட்டது. கொடியேற்று விழாக்களும், பொதுக் கூட்டங்களும், தீபாலங்கார ஜோடனைகளும் விழாவை சிறப்பித்தன.

---


மணம், குணம் ஒருங்கே அமைந்த

**மரகதம்**

**காபியை**

உபயோகியுங்கள்

மொத்தமாயும், சில்லரையாயும் கிடைக்கும்

அன்றுடம் வறுத்து அரைத்து கொடுக்கப்படும்

K. ராமசாமி உடையார்,

பூரண உரிமையாளர்,

மரகதம் காபி ஒர்க்ஸ்

கரூர்.

# ★ அபூர்வ மரங்கள் ★

**புகைவிடும் மரம்**

ஜப்பானில் "ஒனே" என்ற இடத்திலுள்ள ஒரு ஜாதி மரத்தில் புகை கிளம்பிக் கொண்டிருக்கிறது. சூரியன் மறைந்து இரவு வரும் நேரத்தில் புகை கிளம்புகிறது,

**சிரிக்க வைக்கும் மரம்**

அரேபியாவில் "லாபிங் க்டஸ்" என்ற மரம் இருக்கிறது. அந்த மரத்தின் விதையைத் தின்றால் சிறிது நேரம் சிரிக்க நேரிடும். பிரக்ஞையற்று இருக்கவும் கூடும்.

**மழை பொய்யும் மரம்**

"மிரு" என்ற இடத்தில் ஒரு மரம் உண்டு, மேகம் ஆகாயத்தில் இருக்காது. ஆனல் இம்மரத்தின் கீழ் மழை பெய்து கொண்டிருக்கும். வரண்ட நாட்களிலும் மழை பெய்து கொண்டிருக்கும்.

**எண்ணெய் மரம்**

தென்னமெரிக்காவில் பனமாவில் உள்ள ஒருவித மரத்தின் பழங்கள் மெழுகு வர்த்திபோல் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் இப்பழத்தின் மூலம் கிடைக்கும் பொருளை எரி பொருளாக உபயோகிக்கின்றனர்.

**ஊசிநூல் மரம்**

மெக்ஸிகோவில் உள்ள மரத்தில் ஊசிபோன்ற முட்கள் இருக்கின்றன. இம் முட்களை இழுத்தால் இதனுடன் கெட்டியாக, நீளமான நூல் வருகிறது. இம் முள்போன்ற ஊசியும் அதிலிருந்து வரும் நூலும் அங்குள்ளவர்களுக்குத் தையலுக்கு உபயோகப்படுகிறது.

**மரத்தினுள் வீடு**

அமெரிக்காவிலுள்ள, நூறு அடிச் சுற்றளவுள்ள ஒரு மரத்தின் பொந்துகளில் பலர் வசிக்கின்ற

னர். இதனுள் குதிரை லாயம் ஒன்றும் உண்டு.

### மிகச் சிறிய மரம்

அமெரிக்காவில் "காயே" என்று ஒரு மரம் இருக்கிறது. இது முளைத்து 300 வருடங்கள் ஆகின்றன. இதனுயரம் ஒரு அடி. கிளைகள் 70 அடி தூரம் வரை கீழே படர்ந்திருக்கிறது.

### பால் மரம்

அமெரிக்காவில் கரேக்ஸ் என்ற இடத்தில் ஒரு மரம் உள்ளது. அந்த மரத்தில் எந்த இடத்தில் கத்தி கொண்டு கிறினாலும் பால் பிரவாகமெடுத்துக் கிடைக்கிறது. இப்பால் பசும்பாலை விட உருசியாக உள்ளது.

### அழும் மரம்

கானேரித் தீவில் 'அழும் மரம்' ஒன்று இருக்கிறது. இதில் பல துவாரங்கள் இருக்கின்றன. இதன் வழியாக வரும் நீர் இனிப்பாக இருப்பதால் இத்தீவின் மக்கள் இதனைக் குடிக்க உபயோகிக்கின்றனர்.


Telegrams: Marigold

Phone · 31738.

**K. Perumal Udayar**

Importer, Exporter & Manufacturers' Representative
Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்.

K. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.


### விளக்கு மரம்

தென் அமெரிக்காவிலுள்ள 'பிரேஸிலில்' ஏழு அடி உயரமுள்ள ஒரு மரம் இருக்கிறது. இதன் இலைகள் பளபளப்பாய் இருக்கின்றன. இரவில் இம்மரத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரம்வரை வெளிச்சம் செல்லுகிறது. அங்குள்ளவர்கள் இதனடியில் உட்கார்ந்து கொண்டு படிப்பது போன்ற பல வேலைகளைச் செய்கின்றனர்.

# வேடிக்கை?

[— கோமதி தில்லைநாயகம் ]—

'தலைவன் பொருள் தேட அயல் நாடு செல்லவேண்டும் என்று சொன்னது காதில் பட்டதும் கற்சிலையானுள் அவள்!

அதற்குமேல் அவள் காதில் எதுவுமே படவில்லை; அவன் ஆறுதலும் தேறுதலும் பயனில்லை!

வேடிக்கைக்காகச் சொன்னது வினையானது அறிந்து வருந்திஞன் தலைவன்!

காலடியோசை கேட்டது.

ஏறிட்டுப் பார்த்தான், அவள் தோழி வந்து கொண்டிருந்தாள்.

இருவர் நிலையையும்கண்டு துணுக்குற்ருள். சிறிது தயங்கிஞள் தோழி.

"பொருள் தேடிப் போகிறேன் என்றேன் உன் தலைவியிடம். ஆனல் உண்மையில் அல்ல...வேடிக்கையாகச் ...சொன்னேன்—என்று ஏதோ தவறு செய்துவிட்டவன்" போல தடுமாறிப் பேசிஞன்மெல்லிய குரலில்.

தோழிக்கு பொருள் புரிந்தது. தலையசைத்தாள். அவன் அப்பால் போய் விட்டான்!

தலைவியின் தலையை நிமிர்த்திஞள் தோழி. கண்கள் அதற்குள் வீங்கிச் சிவந்திருந்தன.

"அவர் போகிருராம்?"— அதைச் சொல்லி முடிக்க முடியவில்லை அவளால். பிரிவு என்ற எண்ணம் அவளை அத்தனை அலக்கழித்து விட்டது.

"அதனுல் என்ன?"—ஏதுமறியாதவள் போல பேசிஞள் தோழி.

"அவரைவிட்டு நான் பிரிந்திருக்க முடியுமா?"

"முடியாவிட்டால் நீயும் சேர்ந்து போயேன்?"

"அப்படித்தான் நான் சொன்னேன்."

"நான் போகும் வழி பொல்லாதது. வரண்டபாலை. கானல் நீர் கண்டு கலங்கும். மலை எல்லாம் கொதிக்கும். மந்திகள் உணவில்லாது வாடிக்கிடக்கும். சேற்று நீரை உண்டு சேர்ந்து கிடக்கும் யானை. அவ்வளவு வெம்மை அவ்வழி! போர்வெறி கொண்ட அரசன் சூறையாடிய நாடுபோல் கிடக்கும் அப்பாதை.

அப்பாதையிலே நடந்தால் உன் கால்கள் கன்றிப் போகும்! சிங்க வடிவுக்கட்டிலிலே, அன்னத் தூவிமேலே துயின்று பழகிய நீ சிங்கம் முழங்கும் குரலைக் கேட்டு அஞ்சுவாய்! மழைத் துளியும் தாழாத மாந்தளிர் போன்ற உன்மேனி அனல் காற்றால் அழகிழந்து விடும்! என்று எல்லாம் சொல்லி என்னை கூட்டிப்போக மறுத்துவிட்டாரடி அவர்!"

"போடி பைத்தியம்! நன்றாக ஏமாந்து இருக்கிறாய் அவரிடம்!"

"என்ன, என்ன ஏமாந்து போனேனா, எப்படி?"

"அவர் பொருள் தேடப் போகவுமில்லை. உன்னை வாடவிடப் போவதுமில்லை!"

"பின் ஏன் அப்படிச் சொன்னார் என்னிடம்?"

"வேடிக்கை அதுதான். நீ இதையெல்லாம் சொன்னவுடன் எப்படி நடுங்குவாய் என்று பார்ப்பதற்குத்தான்! வேறொன்றுமில்லை!"

"அப்படியா, பொல்லாத வரடி, அவர்! கொஞ்ச நேரத்தில் அவர் என்ன என்ன பாடுபடுத்திவிட்டார். நீ சொல்லியபிறகு தான் எனக்கு நிம்மதி வந்திருக்கிறது. நான் நினைத்தேன், அவர் என்னை பிரியமுடியுமா என்று?"

"ஆ...கா...என்ன அன்பு ...ஆசை..."

"அப்படியானால் அந்தச் செய்தியை இன்னொருதரம் திருப்பிச் சொல்லு. காது குளிரக் கேட்கிறேன்!"

அந்தச் செய்தியை கேட்க தலைவி துடித்தாள். தொழியும் சொன்னாள், நீங்களும்

கேளுங்கள். அதுதான இது.

...வினவயின்

பிரிகுவர் எனப் பெரிது அழியாதி;

திரிபு உறீஇக்

கடுங்குரை அருமைய காடெனின் அல்லது

கொடுங்குழாய்!துறக்குநர் அல்லர்;

நடுங்குதல் காண்மார், நகை குறித்தனரே

பாலைக்கலி, 12.

[பிரிகுவர்—பிரிவார், அழியாதி—வருந்தாதே, திரிபு உறீஇ — மறைத்துத் திரித்து. துறக்குநர்—பிரிபவர், காண்மார்—காண்பதற்காக, நகை—வேடிக்கை].

# ஓங்கும் தொழில்

—கவிஞர் பாரதிமோகன்—

★

பாடுபட்டுப் பண்படுத்தி உழவு செய்து
பகலிரவாய் உழைத்து நல்ல பயிர் செழிக்க
மேடுவெட்டி நீர் பாய்ச்சிக் களை யெடுத்து
மிக்க பலன் வேண்டிநின்றோர் நாளும் பூவில்
நாடுவார் வான்பொழிய வளஞ் சிறக்க
நஞ்சை, புஞ்சை நிலங்களெல்லாம் கதிர் குலுங்கும்!
தேடுகின்ற செல்வங்கள் யாவினுக்கும்
சிறப்புடைய பெருஞ் செல்வம் "மேழி" யன்றோ!

வண்ணமுடன் தங்கநிறச் செந்நெலெங்கும்
வயல்களிலே சாய்ந்துநிற்கும் காட்சி யென்னே!
எண்ணங்கள் இதயத்தே மலர்ந்து ஓங்க
என்றென்றும் பசிபோக்கும் உழவனுக்கும்
பண் முழங்கும், கலை முழங்கும், நாட்டில் நல்ல
பைந்தமிழும் மிகஓங்கும் தொழில்கள் ஓங்கும்!
உண்ண உண வளிக்கும் விவசாயம் நாளும்!
உலகெலாம் உழவர் "தொழில்" ஓங்க வாழ்வே!

## முன் கதை..........

உறுப்பினர் * * * *

லலிதா, கணேசன், சிவகுமார், சுந்தரம்.

அரசாங்கத்தில் உத்தியோகம் பண்ணி உபகாரச் சம்பளம் பெற்று ஓய்வெடுத்துக் கொண்ட சுந்தரம், சரஸ்வதி மில் மானேஜராய் நியமிக்கப்படுகிறார். லலிதாவின் கல்யாண பிரச்னையில் தாய் தந்தையர்க்கிடையே போராட்டம் மூள்கிறது. இந்நிலையில் லலிதா தன் சிநேகிதை சாந்தாவின் அண்ணன் கணேசனின் மேல் 'காதல்' கொள்கிறாள். காதலர்களைக் கண்ணெதிரே கண்டுவிட்ட மாமன் சிவகுமார் சீற்றமடைந்து சுந்தரத்திற்கு கடிதம் எழுதுகிறான். கடிதத்தைக் கண்ட சுந்தரமும், அவர் மனைவி சுசீலாவும் மனங்கொதிக்கின்றனர். அந்தச் சமயத்திலும் லலிதா தன் காதலனுடன் பூங்காவில் உலாவுகிறாள்.

* * * * *

அடுத்து நடப்பனவற்றை தொடர்ந்து படியுங்கள்:

# 11 ❀ பூங்காவிலே போராட்டம் ❀

"ஹா!... ஹா!... ஹா!" வென்ற பேய்ச் சிரிப்பு எதிரொலித்தது. இருவரும் திடுக்கிட்டனர். "ஹா! ஹா! ஹா! திருமணம்! திருமணமாம் திருமணம்! உனக்குத் திருமணம்! என்னையன்றி எந்த நாடோடிப் பயல் உன்னைத் திருமணம் செய்யப் போகிருன்? தாலி கட்டவேண்டிய உன் சொந்த மாமன் இங்கே வந்திருக்கும் போது திருமணத்தைப்பற்றி கவலை உனக்கேன் லலிதா?!" என்று கொக்கரித்தது அந்த பேய்க்குரல். எதிரே நின்றிருந்தான் எமன்போல சிவகுமார். கோபம் ஒருபுறம், வஞ்சம் கலந்த சிரிப்பு மற்ருேர் புறம். இவை இரண்டும் கலந்து கொந்தளித்தன அவன்முகத்தில்.

லலிதா துள்ளி யெழுந்தாள். ஆம், அவள் உடல் நடுங்கியே விட்டது! "எப்படியோ மாமன் கண்ணுல் பார்த்து விட்டான் தன் அந்தரங்கத்தை. இனி இருதலைக் கொள்ளி நாகம்தானே அவன் நிலை? அவன் விஷ சுவாலையை வீசவேண்டுமென்று எதிர்பார்த்தகாலம் இன்று அவனுக்கு கிட்டி விட்டது. விஷ வித்தை இன்று நாட்டி விட்டான். வித்து மரமாய் வளர்ந்து விடாமல் பட்டுப் போகாது! இவ்வளவு நாட்கள் எங்கள் வீட்டில் இன்ப உணர்ச்சி ததும்பியது. இனிமேல் சூருவளி தாண்டவமாடப் போகிறதென்பதில் சந்தேகமில்லை" என்று அவள் உள்ளம் உள்ளூர விளக்கம் கொடுத்தது.

"மாமா! மரியாதைத்தவறி பேசுகிறீர்கள்; நாவை அடக்கிப் பேசுங்கள். என்னிடம் இப்படி யெல்லாம் பேச உரிமையில்லை யென்பதை எண்ணிப் பார்த்துப் பேசுங்கள்" என்ருள் லலிதா.

"உரிமையில்லையா? எனக்கா? சொந்த மாமனுக்கு இல்லாத உரிமை சந்தியில் திரியும் பயலுக்கு உண்டாகி விடுமா? லலிதா! நீ ஒழுக்கங் கெட்டு விட்டாய்! ஊரார் தூற்றும் நிலைக்கு வந்துவிட்டாய். காதல் மோகத்திலே கருத்தை இழந்து மானத்தை விலைக்கு விற்று விட்டாயே நீ! வீட்டில் கண்ணியமான பெண்ணுக நடித்துக்கொண்டு

பணக்கார நாயகனோடு காரில் சவாரி செய்கின்றாயே! மானங் கெட்டவளே! இதுவா உன் ஒழுக்கம்? வெட்கத்தை விட்டு மலர் பூங்காவில் கொஞ்சுகிறாயே! நினைத்துப்பார், உன் யோக்கியதையை" என்று சிம்மம் போல் கர்ஜித்தான் சிவகுமார்.

"இது என் சொந்த விவகாரம்! அதைப்பற்றி நீ அனாவசியமாய்ப் பேசவேண்டியதில்லை! உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? மரியாதையாய் இவ்விடத்தை விட்டு வெளியேறு" என்றாள் ஆக்ரோஷமாக.

"லலிதா! நான் தாய் மாமன் என்பதை மறந்து விட்டாயா? எனக்கு உரிமை இருக்கின்றது என்றுதான் முன்பே சொல்லியிருக்கிறேனே! உன் வாழ்வு கெட்டால் என் வாழ்வும் சூன்யமாகி விடும்! என்னைவிட அன்னியனாகிய அவனுக்கென்ன உரிமை இருக்கிறது? நீ செய்த குற்றத்தை

நான் மறந்து விடுகிறேன்! புறப்படு என்னுடன்; போகலாம் வீட்டுக்கு" என்று அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"துரோகி! விடடா என் கையை" என்று சிவகுமாரன் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை கொடுத்தாள் லலிதா.

"நன்றி கெட்டவளே! அடிக்கவா துணிந்து விட்டாய்? குலத்துரோகி! அந்தப் பயல் பக்கத்தில் இருக்கிருனே என்ற இறுமாப்பா உனக்கு? எவனுலும் என்னை அசைத்து விட முடியாது" என்று மீண்டும் அவளைப் பிடித்து இழுத்தான்.

லலிதா அவன் கையில் அகப்பட்டு திமிறினுள். அவள் முழு சாமர்த்தியமும் சிவகுமாரனிடம் பலிக்கவில்லை. கொஞ்ச நேரம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கணேஷின் கண்கள் ரௌத்ராகாரமாய் மாறின! அவன் கைகள் பதறின. எழுந்திருந்து வந்தான்.

"மடப்பயலே! ஓர் பெண்ணை இப்படியா பலவந்தம் செய்கிறது? கணவனை அவள் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு



நீ பொறுமைப் படுவதில் என்ன பயன்?" என்று கையை உதறி விலக்கினன். ஆனல் குரங்குப் பிடியாய்ப் பிடித்து விட்டான் சிவகுமார். ஆத்திரம் எல்லை கடந்தது கணேசனுக்கு. அவன் முகத்திலே சரமாரியான குத்துக்களை விட்டான். அந்த அதிர்ச்சியிலே லலிதா விடுபட்டு ஒதுங்கி நின்ருள்.

சிவகுமாரன் பற்களை நறநறவென்று கடித்தான். அவன் பற்கள் ஊறல் கொண்டது போலும் 'வெடுக்' கென்று கடித்து விட்டான் கணேசன் கையை. அவன் பார்வையும் கொடூரமாகத் தோன்றியது. இருவரும் மோதினர்-புரண்டனர். இருவருக்கும் பலத்த காயங்கள். ஆனல் கணேசனின் பலத்த அடியால் சிவகுமார், அங்கேயே மூர்ச்சை யடைந்து விழுந்து கிடந்தான்.

கணேசன் கையில் ரத்தம் வடிந்தது. ஓர் கையால் கடியுண்ட இடத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டே சோர்ந்து உட்கார்ந்து விட்டான். ரத்தத்தைக் கண்டதும் லலிதா பதறியே போய் விட்டாள். "கணேஷ்! பலத்தகாயமேற்பட்டு விட்டதா?" என்று அவனைப் பிடித்துக்கொண்டே தண்ணீர் தடாகத்தின் அருகில் சென்ருள். அவன் கையில் வழிந்திருக்கும் ரத்தக் கறையை கழுவினள். ஆனல் கடி

யுண்ட இடத்திலிருந்து ரத்தம் 'குபு, குபு' வென்று வெளியே கிளம்பிக்கொண்டிருந்தது. கைகுட்டையைக் கிழித்தாள். தண்ணீரில் நனைத்து கடிவாயை பலமாக இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தாள் லலிதா.

"லலிதா எங்கே சென்றிருப்பாள்?" என்று தேடிக் கொண்டு வந்த சுந்தரம், நேரே அமர்நாத் பார்க்கில் நுழைந்தார். சுந்தரம் பல இடங்களைத் துருவித் துருவிப்பார்த்துக் கொண்டேவந்தார். வேறு ஓர் திசையில் கார் ஒன்று நிற்பது தெரிந்து அத்திசையை நோக்கிச் சென்ருர். அத்தருணம் கணேசனுக்கு லலிதா பணிவிடை செய்வதை அவர் கண்கள் பார்த்துவிட்டன. கோபம் எல்லையை மீறியது. அதற்குள் இருவரும் அவ்விடத்தை விட்டு எழுந்தார்கள்.

"கணேஷ்! வலி அதிகமாய் இருக்கிறதா?" என்று கேட்டாள் லலிதா. அவள் குரலிலே சோகம் கலந்திருந்தது.

"ஆம்! தாங்கமுடியாத வலி! மனித நாய் கடித்த கடியல்லவா? என்ருன் முனகியவாறு கணேஷ்.

"அம்மா லலிதா எனக்கு சரியான கடிதானம்மா இது! நீ விஷபபாம்பாய் மாறி என்னைக் கடித்தே விட்டாய்!...... லலிதா! யாரம்மா அது? உன் மாமனு? மைத்துனு?" என்று கேட்டவாறு வந்து கொண்டிருந்தார் எதிரே சுந்தரம்.

இருவரும் திகைத்து திரும்பிப் பார்த்தார்கள். கணேசனுக்கு ஒன்றும் புரியவில்லை. கண்களாலேயே எரித்து விடுவார்போல் இருந்தது சுந்தரத்தின் பார்வை. கண்களை உருட்டினுர். "லலிதா" என்று ஆக்ரோஷம் கலந்தக் குரல் கொடுத்தார் மீண்டும். அவ்வளவே, அந்த வார்த்தை அவள் இருதயத்தைத் துளைத்தது! உடல் வெட வெட வென்று உதறியது. தலையைக் கீழே போட்டு விட்டாள். மீண்டும் தன் தகப்பனை ஏறிட்டுப் பார்க்க தைரியமில்லை அவளுக்கு. என்ன சமாதானம் .சொல்வதென்று அவள் சிந்தனையை தொலை தூரம் செலுத்திவிட்டாள் ஒரு விநாடியில். முதலிலே சிறு இடி. அடுத்து பேரிடி. மனம் குழம்பிய நிலையில் அவள் உள்ளம் ஓர் முடிவுக்கு வந்தது.

எதிரே நின்றிருக்கும் சுந்தரம் மறுவார்த்தைப் பேச வில்லை. வெட்கித் தலை குனிந்த லலிதா "அப்பா!" என்று ஓடி வந்து அவர் காலைப்பிடித்துக் கொண்டாள். அப்போது தான் கணேசனுக்கு அவர் லலிதாவின் தகப்பனுர் என்று தெரிந்தது.

"சீ, நாயே! அப்பன் என்ற உரிமை இன்னுமா வைத் திருக்கிருய்?" என்று சுந்தரம் அவள் கையை உதறிவிட்டு விலகி நின்ருர்.

அப்போதுதான் மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்தான் சிவகுமாரன். முன்னைவிட கோபம் குரூரமாக மாறியது அவ னுக்கு. தன் கை சட்டையை மடக்கி தள்ளிக்கொண்டே வந் தான். அவனைப் பார்த்ததும் சுந்தரத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. சிவகுமாரும் சுந்தரத்தை பார்த்து விட் டான். நாகமும் நாகமும் எதிர்த்ததைப்போல் இருந்தது அவர்கள் சந்திப்பு. பெட்டியில் அடங்கிய பாம்பைபோல தன் கோபத்தை தணித்துக்கொண்டு "மாமா! பார்த்தீர் களா? நம்ம குடும்பத்துக்கே இழுக்கைத் தேடி விட்டாள். அது மட்டுமா? அந்தக் காலிப்பயலுடன் கூடிக்கொண்டு என்னையும் எதிர்க்க வந்து விட்டாள்" என்ருன் சிவகுமார்.

"இல்லை, அவ்வளவும் பொய்! அவர் நிரபராதி அப்பா! அவர் உதவி இல்லாவிட்டால் இன்னேரம் என்னை இம்சை செய்திருப்பான். பாவம்! அவர் கையை அவன் பற்களா லும் கொத்தி யெடுத்துவிட்டான் பாருங்கள் அப்பா நீங்களே! அவர் செய்த உதவிக்காகத்தான் என் கைகுட்டை யால் கட்டுகட்டிக் கொண்டிருந்தேன்" என்று பழியை சிவகுமாரன் மீது சுமத்தினுள் லலிதா. அவள் பேச்சு உறுதியை பிரதிபலிப்பதாய் இருந்தது.

"மாமா! நீங்கள் இவள் வார்த்தையை நம்பவேண்டாம். ஜெகப்புரட்டி! உங்களைப்போல் நானும் தான் தற்செயலாய் இங்கே வந்தேன். இவர்களைக் கண்ட என் உள்ளம் பதறி யது. அன்னியனுடன் அளாவளாவிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் எனக்கு எப்படியிருக்கும்? மரியாதையாய் வீட் டிற்கு வரும்படி அழைத்தேன்—வாதித்தேன். ஆனுல் நான் பிரக்ஞை இழக்கும்படியாய் உதை கிடைத்தது தான்

# வ. உ. சி.
# கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்றது)

தலைவர்களின் சிலைகள்

பொம்மைகள்

சிறந்த வர்ண ஓவியங்கள்

சினிமா ஜோடனைகள்

முதலிய கலைப் படைப்புக்களுக்கு சிறந்த தோர்

## கலைக் கோயில்
## நடந்து வருகிறது

உரிமையாளர் :

R. T. கிருஷ்ணமூர்த்தி

அணுகுக :

## வ. உ. சி. கலைக்கூடம்

பூந்தோட்டம்,

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

மிச்சம்! அவன் அடித்தான்; அவளும் சேர்ந்து அடித்தாள். இதைப்போல் தான் அன்று கடற்கரையிலும் இவர்களைப் பார்த்துவிட்டு உங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். இப்போது நீங்களே நேரில் பார்த்தீர்கள் அல்லவா?'' என்றான் சிவகுமார்.

''பொய்! அவனை நான் வெறுக்கிறேன்-வாழ்க்கைப்பட மறுக்கிறேன். ஆத்திரப்பட்டு அதனால் ஏதேதோ ஜோடிக்கிறான். நான் என் சினேகிதைகளுடன் இங்கே வந்திருந்தேன். இரண்டு மணி நேரம் ஆடிப்பாடினோம். அவர்களெல்லாம் அப்படியே போய் விட்டார்கள். நானும் இப்படியே வீட்டிற்கு புறப்பட்டு வந்தேன். இவனும் என்னை வழியில் மடக்கி பலாத்காரமாய் இங்கே தூக்கி வந்தான். நான் உதைத்தேன், அடித்தேன், கூக்குரலிட்டேன். காரில் வந்தவர் எப்படியோ என்னை பார்த்து மீட்க ஓடோடி வந்தார். காப்பாற்றினார். அவ்வளவுதான் அப்பா'' என்று தன் கண்களில் நீரை விட்டுக்கொண்டு அழுது துடித்தாள் லலிதா. அவள் துடிப்பையும், நடிப்பையும் கண்டு மனம் உருகிவிட்டார் சுந்தரம். பெற்ற தந்தையல்லவா? மகள் மனம் கசிய பொறுப்பாரா?

''நயவஞ்சகனே! இவ்வளவிற்கு கூட துணிந்து விட்டாயா? என் பெண்ணை கெடுக்க முயற்சித்தது மில்லாமல் அபாண்டமான கதை வேறே கட்டுகிறாயா? கடிதம் கூட எழுதத்துணிந்து விட்டாயே! என் முன்னே நிற்காதே! ஓடிப்போ இந்த இடத்தை விட்டு'' என்றார் சுந்தரம்.

உண்மைக்கு எவ்வளவு ஆபத்து? உண்மை வழியில் வாழ விரும்புவோர்க்கு இடமில்லை. படித்த அறிவாளி தான் சுந்தரம். அவசர புத்தி. குடும்ப கௌரவத்திற்கும் சுந்தரத்தின் பெருமைக்கும் இழுக்கு நேரக்கூடா தென்ற எண்ணத்தோடு சுயநலங் கொண்டுதான் சிவகுமார் குறுக்கிட்டான். ஆனால் அவன் எடுத்த முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகத்தான் முடிந்தது. அது அவன் குற்றமா? இல்லை. அவ்வளவும் லலிதாவின் திருவிளையாட்டால்தோன்றிய சதுரங்கக் காய்களின் சுழற்றல் தான்.

''பலே பேஷ்! மெச்சினேன் உன்னை! பெற்றெடுத்தும் வளர்க்க தெரியாமல் பெண்ணை வளர்த்து விட்ட அறிவில்

லாதவனே! உண்மை உன்னிடம் எப்படி தஞ்சமடையப் போகிறது! இனி நீ கவலைப்படவேண்டாம் மாப்பிள்ளையைப் பற்றி! அதோ நிற்கிறான் திருட்டு நீலி, தானே தேர்ந்தெடுத்திருக்கும் கணவன்" என்று காரி துப்பிவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினான் சிவகுமார்.

"வா தம்பி! உன் பெயர் என்ன?" என்றார் சுந்தரம்.

"கணேஷ்" என்றான்.

நல்ல வேளை, நீ வந்து என் பெண்ணைக் காப்பாற்றியிருக்கிறாய்! அந்தப் பாவியினிடமிருந்து காப்பாற்றினதற்கு நான் நன்றி செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். நீ செய்த உதவியை லலிதா எப்பொழுதும் மறக்கமாட்டாள். நாங்கள் வரட்டுமா" என்று லலிதாவை அழைத்துக்கொண்டு வெளியே போனார் சுந்தரம்.

பின் தொடர்ந்தான் கணேசன். "ஸார் நில்லுங்கள்! நீங்கள் நடந்து செல்லவேண்டாம் நானே காரில் அழைத்துச் சென்று வீட்டில் விடுகிறேன்" என்று தன் காரின் கதவைத் திறந்து விட்டான்.

சரி என்றார் சுந்தரம்.

இருவரும் காரில் ஏறிக்கொண்டார்கள். கார் சுந்தரத்தின் வீட்டு வாசலண்டை போய் நின்றது. வண்டியை விட்டு இருவரும் இறங்கினார்கள். அவர்களுடன் கணேசனையும் வரும்படி அழைத்தார் சுந்தரம். மற்றொரு சமயம் வருவதாய்க் கூறிவிட்டு காரை ஓட்டினான் கணேஷ்.

வீட்டிற்குள் நுழைந்ததும் சுசிலா, ஆத்திரத்தோடு ஓடி வந்தாள். சுந்தரம் நடந்த விஷயங்களை சொல்லி சிவகுமாரனைக் கேவலமாக நிந்திக்கத் தொடங்கினார். சுந்தரத்தின் ஒவ்வொரு சொல்லும் ஆணி அறைந்தது போலிருந்தது சுசிலாவின் இருதயத்தில். அவள் கண்களிலே கண்ணீர் கங்கையாக புரண்டோடியது.

**நா**ட்கள் எட்டு உருண்டோடின! லலிதா வீட்டை விட்டு வெளியில் போகக்கூடாது என்று தடை உத்திரவு வேறு போட்டிருந்தார் சுந்தரம். உல்லாசமாக ஓடி ஆடி திரிந்திடும் பறவையை கூண்டில் அடைத்தது போல் இருந்தது வீட்டுச்சிறைவாசம். இலவு காத்த கிளியைப்போல் காத்திருக்கும் கணேசனை உள்ளத்தில் வைத்து வளர்த்தாள். தென்றல் இளநகை புரிந்தது. ஆனல், சிரித்ததா? இல்லை, காலம் சூறவளியாக மாறியது. கணேசன் மறுமுறை வந்து சந்திப்பான் என்று எதிர்பார்த்த அவள் கண்கள் மங்க ஆரம்பித்தன. அவள் கண்களிலே முத்து முத்தாக எத்தனையோ நீர்த்துளிகளும் சிதறிவிட்டிருக்கின்றன. ஆடம்பரத்தை மறந்தாள்—ஆசைக் கடலிலே எண்ண அலைகள் மோதியது! சூழ்ச்சியின் கட்டால் பிணைக்கப்பட்டாள், துயரத்தின் இருளறையில் கதறுகிருள். பாவம்! லலிதாவின் நிலையைக்கண்டு பரிதாபப் படுபவர்கள் யார் இருக்கிருர்கள். இயற்கை தான் பார்த்து புன்னகை புரிகிறது!

"கணேசனுக்கு தூதுவிடவேண்டும், நீட்டோலை அனுப்பவேண்டும், எப்படியாகிலும் அவனை சந்திக்க வேண்டும், வெற்றித் திருமணச் செய்தி வெளி வட்டாரங்களில் பரவி ஒலிக்கவேண்டும்" என்றெல்லாம் எண்ணப் புழுதியை நாளுக்கு நாள் கிளறிவிட்டுக் கொண்டே யிருந்தது லலிதாவின் மனம்.

ஓர் நாள்;

மாடியில் லலிதா நின்று கொண்டிருந்தாள். திடீரென்று அவள் வீட்டு முன்னே கார் ஒன்று வந்து நின்றது. யாரைக் காண ஏங்கித் தவித்தாளோ அந்தக் கணேசனே வந்திருந்தான். லலிதா மாடியை விட்டு ஓடோடியும் வந்தாள். காரில் கணேசன் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தான். அவ்வேளை வீட்டில் சுசிலாவும் வெளியில் சென்றிருந்தாள். லலிதாவுக்கு ஓர் வகை தைரிய மேற்பட்டுவிட்டது. "கணேஷ் வாருங்கள்

# ATTENTION TO ALL CINE PRODUCERS & DISTRIBUTORS

★

All kinds of Best quality and Longstanding Film Boxes, Spool Boxes, and Film Rocks are available in ready stock at Moderate rate.

Please call at the following places or Phone to 3619

## STAR STEEL TRUNK WORKS

### 84, Mint Street, Madras-3

No. 305, N. S. C. Bose Road,
China Bazaar, Madras-1

No. 1, Egavalli Ammon Koil Compound,
MADRAS-1

For any other requirements of Cine purposes we undertake to supply and orders will be executed promptly.

SOLICITING AN OPPORTUNITY TO SERVE YOU

உள்ளே" என்ருள். அவள் பேச்சில் இன்ப ஊற்றும், களங்கமின்மையும் கலந்து உறவாடின.

கணேசன் கர்ரைவிட்டு இறங்கி வீட்டினுள்ளே சென்ருன்.

லலிதா எதிர்கொண்டு ஓடிவந்தாள். உள்ளே நுழைந்த கணேஷ் அவள் கரத்தை தாவி பிடித்தான். சிறிது நேரம் ஸ்மரணை தவறி விட்டாள் என்றே சொல்லலாம்! ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள். இருப்பினும் கணேசனுக்கு உள்ளூர பயம். யாராவது வந்து விட்டால் (?) ஆபத்தாகி விடுமென்று எண்ணிஞன் போலும். லலிதாவின் கையில் காகிதமொன்றை திணித்து விட்டு விருக்கென்று வெளியில் வந்தான் கணேஷ்!

"கணேஷ்" என்று கூவிஞள் லலிதா? கணேஷ் புன்னகைப் பூத்தபடி காரிலேறி ஓட்டி மறைந்தான். ஏமாற்றமடைந்த முகத்தோடு அவன் போன திக்கை பார்த்தபடி நின்ருள் லலிதா.

இந்த நிலையில் வெளியில் சென்றிருந்த சுசிலாவும் வந்தாள். "யாரடி அப்படி விழுந்து பார்க்கிறே! போ போ வீட்டுக்குள்ளே" என்று சொல்லிக்கொண்டே உள் நுழைந்தாள் சுசிலா. மாடிக்குச் சென்ற லலிதா கதவை மூடி தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்.

கணேசனல் எழுதப்பட்ட கடிதத்தைப் பார்த்துஅவள் உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கி விட்டது. கடிதத்தை பிரித்தாள். முத்து முத்தாக எழுத்துக்கள் காணப்பட்டன.

அன்புள்ள லலிதா!

இயற்கையே வடித்தெடுத்த உன் உருவத்தைக் கண்டு ஏழு நாட்களாகி விட்டது. செயற்கையில் செய்யப்பட்ட உருவத்தைக் கண்டு ஏமார்ந்துவிட்டவனைப்போல் பிரமை கொண்டு இருக்கிறேன். என் உள்ளத் தடாகத்தில் நீந்தி விளையாடிஞய்! தென்றல் படைப்பில் இன்ப சுகம் அடைந்தோம் நீயும் நானும் மலர்ப்பூங்காவில்! மலர்களெல்லாம் நம்மைப்பார்த்து

கேலி செய்ததை, நம்மைக் கண்டு பரிகசித்ததை நீ மறந்திருக்கமாட்டாயே! ஆனால் அந்த மலர்களெல்லாம் இன்றளவும் வாடித்தான் இருக்குமென்று நான் நினைக்கிறேன்! ஏன்? நீயும் தான் நினைப்பாய்—வாழ்வை ரசிக்கப் போகும் நம் பாதையில் இயற்கை எள்ளி நகையாடிவிட்டது! ஆம், நகையாமல் என்ன செய்யும்? அதன் நகைப்பை நாம் இதுவரை பார்க்காமலிருந்து விட்டோம். அதன் பின் தான் நாம் அங்கே போகவில்லையே! நீ வார்த்தையில் ரொம்ப கெட்டிக்காரியாக மாறினாய் உன் தகப்பனாரிடத்தில்! உனக்கும் ஓர் வைரி, அவன் தாய் மாமனாக இருக்கிறானே என்று நான் வியப்படைகிறேன். நீ கட்டிவிட்ட கடியுண்ட விடத்தை ஒருவாறாக ஆற்றிக்கொண்டு வருகிறேன். இதுவரை நீ புறப்படாததற்கு உன் வீட்டில் ஏதேனும் கலவரம் ஏற்பட்டு இருக்குமென்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. தவிர நான் நினைப்பது சரியா தப்பா என்று முடிவு கட்டவும் என்னால் முடியவில்லை. என்னால் உனக்கு எத்தனை இன்னல்கள் ஏற்பட்டிருக்கின்றவோ! மலரும் மணமுமாக திகழ்ந்திருந்தோம்! என் உள்ளத்தை உன் நறுமணத்தால் பரவசமுறச் செய்தாயே, இப்போது நறுமணம் வீசிய அந்த விடத்தை வேறு மணம் ஆக்ரமிக்கலாமா? என்ன மாறுதல்? நான் உனக்கேற்ற கணவன் இல்லை என்றா உன் வருகையை மாற்றிக்கொண்டாய்? சொல், லலிதா சொல்!

நாளை ஒன்பதாம் பிறை. வானவீதியிலே வெங்கலச் சிரிப்பொளியைக் காட்டும் வெண்மதியைக் கண்டு ரசிக்கலாம். என் கடிதத்திற்கு பதில் தேவையில்லை. நான் மாலை வீட்டை விட்டு ஆறு மணிக்கு புறப்பட்டு வருகிறேன். நீயும் உன் வீட்டில் இருந்து ஆறு மணிக்கு புறப்பட்டு வரவேண்டியது. வழியிலே நாம் சந்திப்போம். மற்றவை நேரில்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள, கணேசன்.

லலிதா கடிதத்தை படித்து முடித்தாள். ஒவ்வொரு வார்த்தையும் லலிதாவின் உள்ளத்தை மெழுகாக உருக்கிக் கொண்டிருந்தது. அவள் கண்கள் கண்ணீரைச் சிந்தின. எண்ண அலைகள் மேலே மேலே மோதிக் கொண்டிருந்தன. இக்கட்டான நிலையில் அவள் பேனு வேலை செய்யவில்லை. ஏதோ எழுதினுள், கிழித்தாள்.

"என் நிலை அவருக்கென்ன தெரியப்போகிறது? மனவருத்தத்தில் கடிதம் எழுதிவிட்டார். அவரைப் போல் நானும் ஏங்குகிறேன் என்று அவருக்கெப்படி தெரியும்? எப்படி வீட்டை விட்டு வெளியே செல்வது? என்னை எதிர் நோக்கி எவ்வளவு ஆவலுடன் வருகிருரோ? எப்படியாவது போய்த்தான் ஆகவேண்டும்—போயே தீர்வேன்!" என்று பன்முறை சொல்லிக்கொண்டே படுத்தாள் கட்டிலின் மீது. அவள் மனம் நிதானம் அடையவில்லை, அயர்ந்து விட்டாள் தன்னை மறந்து.

காலத்தின் கூற்றை அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. சுந்தரம் அன்று வீட்டிலேயே இருந்துவிட்டார். அன்று பகல் யாவரும் சாப்பிட்டார்கள். சுந்தரம் ஆயாசமாக படுத்துவிட்டார். சுசீலா தன் பெண்ணுடன் போய் அவள் அறையில் படுத்துக் கொண்டாள். வெளியுலகில் எண்ணத்தை வைத்திருக்கும் லலிதாவுக்கு பகலில் எப்படி தூக்கம்வரும்.

சுவர் கடிகாரம் ஒவ்வொரு மணியாக கடந்துக் கொண்டே போகிறது. லலிதாவுக்கு தூக்கமே வரவில்லை. தலை தூக்கி பார்க்கும்போதெல்லாம் சுசீலா விழித்துக் கொண்டே இருக்கிருள். கொஞ்ச நேரம் வெளியில் வந்தால் போதும்! 'லலிதா' என்று உடனே கூப்பிட்டு விடுகிருள். பாவம்! லலிதா என்ன செய்வாள்? வெளியில் செல்லும் சுந்தரம் கூட அன்று எங்கும் புறப்படவேயில்லை. அன்றைய பகலை வீட்டிலேயே கழித்து விட்டார். ஏன்? ஒருவார ஓய்வு நாளைப் பெற்றிருந்தார்? என்பதை அவர் தான் அறிவார்.

(வளரும்)

# M. சுப்ரமண்யம் & பிரதர்ஸ்

## (ஞானம்பிகா பிராண்டு)

ஸ்டீல் டிரங்க்கு வியாபாரம்

மூர்மார்கெட்,

சென்னை-3.

---

(அரசாங்க அங்கீகாரம் பெற்றபேப்ரிகேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட் கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்க்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.

பேக்டரி: நெ. 52, சைடன்ஹாம்ஸ் ரோடு, சென்னை-3

ஷாப்: நெ 15- பிளாக்கு மூர்மார்கெட், சென்னை-3.

இங்ஙனம்.

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)

M. கோவிந்தசாமி

M. ராதாகிருஷ்ணன்

# பண்பு

## சிசு

அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சியை உருவாக்குவதில் தனித் திறமைவேண்டும். அதிலும் ஏழைச்சமுதாயத்தினரின் வழக்க ஒழுக்கங்கள், பேச்சுப்போக்கு இவற்றையும் பிரதி பலிப்பதின் மூலம் தன் கற்பனைத் திறத்தை வடித்துக்காட்டுகிறார் "சிசு"

(அதிகாலை: சேவல் கூவுகிறது.)

"இடியாப்பம்! தேங்காய்ப் பால் இடியாப்பம்!"

"சுக்குத் தண்ணி! சுக்குத் தண்ணி! கரம் சுக்குத் தண்ணி!"

"பலூன்! பலூன்! பச்சைப் பலூன்! சிவப்பு பலூன்! பாலகர்கள் விரும்பும் பலூன்!... பலூன்!" (குரல்கள்)

**நான்:** அப்பப்பா! என்ன குளிர்!...என்ன பனி! மார்கழி மாதத்துப் பனி என்பது சரியாய்த்தானிருக்கிறது. ஊசி போல உடம்பில் குத்தினாலும் அதிலும் ஒரு இன்பமான சுகம்...இந்தக் குளிரில் அதற்குள் கிளம்பி விட்டார்களே, பாட்டாளி மக்கள் தங்கள் தொழிலின் நிமித்தம். ஆமாம்! அவர்கள் இன்று வயிற்றைக் கழுவவேண்டுமல்லவா?

**பலூன்காரர்:** "பலூன்! பலூன்! பச்சைப் பலூன்!... சிவப்பு பலூன்!

(குழந்தை அழும் சப்தம்)

**இடியாப்பம் விற்பவள்:** அட, சும்மா இருக்கமாட்டே...... காலங்காத்தாலே முழிச்சுக்கிட்டு உசிரை வாங்கிறேயே. வெயிலு ஏறு முன்னே வித்துட்டாத்தானே இன்னும் பொளுது கழியும்? அழாதடா ராஜா...இடியாப்பம்!... இடியாப்பம்!

(மீண்டும் குழந்தை அழும் சப்தம்)

இடியாப்பம் விற்பவள் : கண்ணுல்லே! அழாதேடா ராஜா! பெலூனு வாங்கித் தாரேன். ஏ, அண்ணே! பெலூன்கார அண்ணே! இந்தா இங்கே வா.

பலூன் : பலூன்!...பலூன்! ...என்னம்மே! காலங்காத்தாலே குழந்தையைத் தூக்கிக்கினு யாபாரம் மேலே கிளம்பிட்டே. கொட்டுற பனிலே கொழந்தைக்கு எதனாச்சும் வந்துட்டா என்ன செய்வே?"

இ. வி: என்ன அண்ணே செய்யறது? ஊரு அடங்கி ஒரு ஜாமம் ஆனப்புறம்தான் ராவிலே தூங்குறன். கருக்கல்லே கோழி குரல் கொடுக்கு முன்னே எழுந்திருச்சுக்கிட்டு உசிரை வாங்குது. கஷ்ட காலம்...சரி, அதுககு ஒரு நல்ல பலூனு, உடையாததாக் கொடு அண்ணே.

பலூன்: ஏம்மா, எங்கனச்சும் பலூன் உடையாம இருக்குமா? வேண்ணு இந்த 'ளாஸ்டிக்' பலூனே வாங்கிக் கொடு...ரொம்ப நேரம் வரும் ...இந்தாடாபயலே!(அழுகை நின்று விடுகிறது)

இ. வி: ஐயோ, நேரமாவுதே! என்னண்ணே அதுக்கு வெலே?

பலூன்: கொடேன் தங்கச்சி. எல்லாருக்கும் ஓரணுக்கு

விக்கிறேன். நீ முக்காலணா கொடேம்மா...பதிலுக்கு இடியாப்பம் தான் கொடுத்திறேன்.

**இ. வி:** சரி, சரி, வாங்கிக்கோ...இந்தா புடி. ஒரணாக்கு தான் நாலு கொடுப்பேன். நீ ஏன் பெலூனுக்கே நாலு வாங்கிக்கிட்டுப் போயேன்...முழிக்கிறதைப் பாரு, ஆந்தையாட்டம்! பெலூனை வாங்கிக்கிட்டதும் வாய் 'கப்பு'ண்ணு அடைச்சிட்டதைப் பாரு.

**பலூன்:** தங்காச்சி! இன்னும் கொஞ்சம் தேங்காப்பாலு போடு. சூடா; ரொம்பஜோராருக்குது இடியாப்பம். ஆமா கொஷந்தைக்கு தலைக்குட்டை கட்டியிருக்கக் கூடாதா?

**இ. வி:** ஆமாம்! சீமான் மகன்; தலைக்குட்டையில்லாட்டா சளுப்பு பிடிச்சுக்கிடும். நீ ஒண்ணு. அண்ணைடம் வயித்தைக் களுவறதும், என மானத்தை மறைச்சிக்க ஒரு டெடுமுடித் துணி வாங்கறதுமே திண்டாட்டமாப் போகுது? தலைக்குட்டை வேணுமாமில்லை; தலைக்குட்டை.

**பலூன்:** தங்கச்சி நான் சொல்றேண்ணு கோவிச்சுக்காதே. பயல் ராஜாவாட்டமிருக்கான். கண்ணும் கருத்துமா பாத்துக்கிட்டாத்

தானே நாளேக்கு உனக்கு கஞ்சி ஊத்துவான்?

இ. வி: அட நீ ஒருபக்கம்... ஐயோ நேரமாவுதே...அவ னோட வப்பன் அக்கரைச்சி மேலே போய் அள்ளிட்டு வரப்போனுன். மூணு வருஷமா என்னுணுணு கூடத் தெரியாது...இவருதான் எனக்கு சம்பாரிச்சுப் போட்டுரப் போருராக் கும்—என்னவோ, போ, உடம்புலே தெம்பு இருக்கிற வரைக்கும் உழைக்கிறேன். மரம் வைச்சவன் தண்ணி விடாமலா போயிரப் போருன்?...நான் வரட் டுமா?...இடியாப்- - -"

பலூன்: நல்லாச் சொன்னே தங்கச்சி. ஆனு கொஷந் தைங்க தெய்வங்க தாமிங் றதை மறந்துடாதே... இப்போ பாரு, நானு பலூன் விக்கிறேன். கொஷந்தைங்க தானே வாங்குதுங்க... பாக்கப்போனு அவங்க தானே எனக்கு கஞ்சி வாக்கி றுங்க. ஒன் மவனுலேதானே நீ கூட இப்போ பலூன் வாங்கினே.

இ. வி. நீ நல்ல வக்கணே யாப்பேசுறே, பேசிப் பேசி அனுபோகம், சரி நேரமாச் சுது, நான் வர்றேண்ணே.

பலூன்: என்னும்மா அவ சரம்? இன்னம் ஊரே சரியா முளிக்கலே. அதுக்குள்ளே பறக்குறயே? சரி எனக்கு இன்னும் ஒரணுக்கு இடி யாப்பம் குடு. நானும் ஒங் கிட்டே யாபாரம் தானே பண்றேன். என் அவசரப் படறே?

இ. வி. இந்தா புடி. இதுக் குக் காசு வேணும். இன் னெரு பெலூனக் கொடுத் திருதே...முதல் போணி, இன்னிக்கும் பெலூனுத்தான் போயிடிச்சு!

பலூன்: ரொக்கக்காசு தந்துடறேன் தங்கச்சி...... என் கைராசியைப்பத்தி நானே சொல்லக்கூடாது, பாரேன். இண்ணைக்கு இடி யாப்பம் கபகபன்னு பறக் குறதை?...அட, இதிலே ஐஞ்சு ஆப்பம் இருக்குதே தங்கச்சி...இந்தா ஒண்ணே வாங்கிக்கோ.

இ. வி. நானு பாத்துத் தான் கொடுத்தேன்...சும்மா சாப்பிடு ... காசைக் கொ டேன். நானுபோவட்டும்!

பலூன்: சே, அதானே கூடாது! உடம்புலே தெம்பு இருக்கிறவரைக்கும் உழைக் கலாம். மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்.

இந்தா, புடி. ஒண்ணே காலணு. போயிட்டு வா! அட பயலே, சிரிக்கிறதைப்பாரு. திருட்டுப்பய!

இ. வி. நானு வாரேன்...... இடியாப்பம்...இடியாப்பம்.

நான்: அட, இந்தப்படிக் காத ஜனங்களிடம் தான் என்ன பாசம், என்ன பரிவு? என்ன நாணயம்?

"பலூன், பலூன்... ளாஸ்டிக் பலூன்! ரப்பரு பலூன்"

நானு: ஓ, பலூன்...இந்தாப்பா. இங்கே வா!

பலூன்: பலூன் பலூன்... ஏஞ்சாமி ...ளாஸ்டிக் பலூன் வேணுங்களா? ஓரணு. ரப்பர் பலூன் தரட்டுமா, அரையணு.

நானு: ஏம்பா, பிளாஸ்டிக் பலூன் அரையணுத்தானே? நேத்து பீச்சிலே வாங்கினேனே...போனுப்போவுது முக்காலணு வெச்சுக்கோ"

பலூன்: சாமி, எங்களுக்கே டசன் எட்டணுண்ணு போடுருன். இதிலே பாதிக்குமேலே வெடிச்சுப் போயிடு-து. ளாஸ்டிக் பலூன் எப்படி சாமி அரை யணுவுக்கு கொடுப்


P. ஹூசேன்ஷா & சன்ஸ்

(பூரண உரிமையாளர்)

P. H. முகமது நஸீருத்தீன்

டால்மியா சிமென்ட் ஸ்டாக்கிஸ்ட்.

G I பைப் & பைப் பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.

பாலக்கரை ரோடு திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE


பாங்க. மூணு பெண்டணுவுக்கு வாங்கிக்கிடுங்க சாமி!

நானு : முக்காலணுண்ணு முக்காலணு தான்...... நான என்ன பொய்யா சொல்றேன் ...கட்டுமிண்ணுக் கொடு; இல்லாட்டால் விடு.

பலூன்: ஏன் சாமி, காலணுவுக்குப் பாக்கிறிங்களே. நீங்க மகராசாக்கள்ளாம் இப்புடிக் கணக்குப் பாத்தா நாங்க ஏழைங்க புழைக்கிறது எப்படி சாமி?

நானு : ஏம்பா ... காலணுவிலே கோட்டயா கட்டிறப்

2/21, Pilliar Koil Street,

MADRAS-3

---

போறேன்: நியாயம் வேண்டாம்? நேத்து நான் அரையணுவுக்கு வாங்கி யிருக்கச்சே நீ முக்காலணுண்ணு பிடிவாதம் பிடிக்கிறயே?

பலூன்: சாமி, நீங்கள்ளாம் பெரிய வங்க. நாங்க பேசப்பிடாது. ஆனா யாருணச்சும் அறையணுவுக்கு ளாஸ்டிக் பலூன் கொடுத்தாண்ணு நான் இம்மாம் பலூனையும் சும்மா கொடுத்திர்ரேன், சாமி.

நாணு: அப்போ நான் பொய் சொல்றேங்கிறே? இந்த மாதிரி ஆசாமிகிட்டே வியாபாரமே பண்ணக் கூடாது, விடப்பா நான் போறேன்...

(பலூன்...... பலூன் ...... பலூன்...)

நான்: டேய், நாணு வா? என்னடா காலேலே வியாபாரம்? குளிருக்கு இன்ஜின் ஐம்முண்ணு புகை விடறதே?

நாணு: அட பழி! கிச்சுவா? எப்போடா வந்தே கும்போணத்திலிருந்து? ஆளு பக்க வாட்லே வளர்ந்துட்டையே. இந்தா நீ ஒரு டம் பிடிக்கிறயா?

நான்: வேண்டாம், வேண்டாம். நமக்கு 'அக்கினி ஹோத்திரம்' பழக்கமில்லேண்ணு உனக்குத் தெரியாதாடா?

நாணு: போடா, கர் நாடகம்! இது விலையுயர்ந்த சிகரட்டாக்கும். சிங்கப்பூர்லேருந்து நமக்கு 'ஸ்பெஷலா' வர்ரதுடா?

நான்: எண்டா? பலூனுக்கு கர்லணு கூடக்கொடுக்கிறதுக்கு மூக்காலே அழுது, விரட்டிட்டே? விலையுயர்ந்த

சிகரட்டை புகைச்சுத்தள்றேயடா?

**நாணு:** போடா, போ! நீ ஒண்ணு. இந்தப் பசங்கள்ளாம் இப்படித்தாண்டா! எதுக்கும் நியாயம் வேண்டாம்?

**நான்:** அடே உன் நியாயம் எனக்கு வேண்டாம். வீட்டிலே எல்லோரையும் கேட்டதாச் சொல்லு. நான் வறேன்.

**நாணு:** அப்புறம் வீட்டுக்கு வாயேண்டா "குட்பை "சீர் யூ"

(குழந்தை அழும் சப்தம்)

"பலூன்! பலூன்! பச்சை பலூன்! சிவப்பு பலூன்! பாலகர்கள் விரும்பும் பலூன்"...ஏன் தங்கச்சி இன்னும் இங்கேயே நிண்ணுக்கிட்டிருக்கிறே? அட பயலே, என்னடா பழைய படியும் பாட்டை ஆரம்பிச்சுட்டயா, இந்தாடா பலூன்.

**இ. வி:** அண்ணே! இண்ணைக்கு ஒரு நிமிஷத்துலே பூரா இடியாப்பமும் வித்துப் போச்சு. கெடன் வியாபாரம் கூடக்கிடையாது. ஒன் வாக்கு நெசமாப் போச்... ஆனா... நீ கொடுத்தயே பலூன். அதுதான் தெருக்கோடி திரும்பறதுக்குள்ளே "டபார்"ணு வெடிச்சிடுச்சு. பய அப்பபுடிச்ச அழுகையை நிறுத்தருன்லே. இந்த ஓரணா ஒரு பெலூன் கொடு.

**பலூன்:** ஏந் தங்கச்சி! பலூன்னு வெடிக்காம இருக்காதுண்ணு நான் சொல்லலேயா? சரி. இந்தா இந்த பலூனே வெச்சுக்கோ. ஓங்காசு ஓங்கிட்டயே இருக்கட்டும். ஒரு பலூன் ஊதற போது வெடிச்சுட்டுதுண்ணு நினைச்சுக்கிறேன். பயலே வரேண்டா!

"பலூன்! பலூன்! பலுன்.

**இ. வி:** இவரு! வேடிக்கையான ஆளால்லா இருக்கிருரு! வாக்குலே தான் என்ன சுத்தம்?


# தொழில்

**மாதமிருமுறை**

**சந்தா விகிதம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | 0—4—0 |
| ஆண்டு சந்தா | 6—0— |
| வெளி நாடு | 8—0—0 |

# Sree Jayalakshmi & Co.,

## MAKERS OF CANE FURNITURE

**14, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.**

எந்த விதமர்ன உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பல நிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரி செய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

உரிமையாளர்,

**K. N. ராஜன்.**

# ★ அதிசயச் சம்பவங்கள் ★

## பெண் பலசாலி மரித்தாள்

சர்க்கஸ் கூடாரத்தில் பிறந்து வளர்ந்த பாலி என்ற பலசாலி மாது தனது 77-ம் வயதில் டப்ளின் ஆஸ்பத்ரியொன்றில்காலமானாள். அவள் 40 - ஆண் மல்லர்களோடு சண்டையிட்டவளாம். ஆண் மல்லர்களோடு சண்டை போட வாய்ப்பு இடைக்காத காலத்தில் சிங்கத்தோடு போரிட்டுப் புரள்வாளாம். அவளுக்குக் கணவர்கள் இருவராம். அவள் சர்க்கஸ் ஆட்டத்தில் குதிரையைப் பல்லால் கடித்துத் தூக்கிக் காட்டுவாளாம். கணக்கு வழக்கில்லாமல் செல்வத்தைக் குவித்த அவள் இறந்தபோது பரம ஏழையாய் இருந்தாளாம்.

* * * *

## நாடகக் கதைக்கு அதிர்ஷ்டம்

ஷெலாடிலானே என்ற பெண் லண்டன் தொழிற்சாலையொன்றில் வேலை செய்கிறவள். மற்ற எழுத்தாளர்களைப் போல் தானும் ஓர் நாடகம் எழுதினாள். 15-நாட்களில் எழுதி முடித்த அந்த நாடகத்தை ஸ்ட்ராட் போர்ட் தியேட்டர் நிர்வாகிகளுக்கு துணிந்து அனுப்பி வைத்தாள். அதை அவர்கள் நடித்தார்கள். அந்த நாடகக் கதைக்கு சினிமா படப் பிடிப்பு கிராக்கியும் வந்தது. 20, 000 பவுனுக்கு உரிமை தந்திருக்கிருள்.

* * * *

## 4 - கன்றுகள் ஈன்ற பசு.

இரண்டாம் முறையாக 4 கன்றுகளை ஓர் பசு ஈன்றிருக்கிறது. நான்கு கன்றுகளும் திடமாய் இருக்கின்றன. இச்சம்பவம் லண்டன் பிரதேசத்திலுள்ள பெர்க்ஷயரில் நடந்தது.

# வட்டியும், முதலும்

## 'அமலன்'

நகைச்சுவை கலவையிடும் சுவை மிக்கத் தமிழில் சித்தரித்துக் காட்டி தன் எழுத்துத் திறனில் வெற்றி முரசம் கொட்டுகிருர் அமலன். தனது பிரதான தொழில். உப - தொழில் இரண்டையும் மையமாய் வைத்துப் புனேந்துள்ள இக்கதை ஒவ்வொருவர் உள்ளத்தையும் தொடும் என்பது உறுதி.

—ஆ—ர்.

பிரயாணத்திற்கான பொருள்கள் எல்லாம் தோல் பையில் தயாராக இருந்தன.

நான் பெண் பார்க்க சென்னேக்குப் போகிறேன். தனியாகத் தான் போகிறேன். பெண் வேறு யாருமல்ல. என் தமக்கையின் குலக்கொடி கனகா தான். நான் அவளே ஐந்து வயதில் பார்த்தது. அதற்குப் பிறகு ...? ஆம்! அக்கா, குடும்பத்துடன் கோலாலம்பூருக்கு கடல் கடந்து போய்விட்டாள். பதினான்கு வருட இடைவேளைக்குப்பின் போனமாதம் தான் சென்னேக்கு வந்து சேர்ந்தனர்.

என் மாமா ஒரு சிறந்த டாக்டர், பட்டணத்தில் பங்களா, அதைச் சூழ்ந்து சிங்காரத்தோட்டம், கார், இந்த ஆடம்பரங்களுக்கெல்லாம் அவர் சளேத்தவரல்ல. புது மாப்பிள்ளேயாக முதல் முதலாக அவர் வீட்டிற்குப் போகும் எனக்கு வரவேற்பு உபசரிப்பு இவைகளுக்கெல்லாம் பஞ்சமா என்ன? கனகாவும் நானும் சிறுவயதில் கட்டிப்புரண்டு விளேயாடியது என்னவோ உண்மை. ஆனல் இன்றே: பத்தொன்பது வயதில் எத்தனே, எத்தனே 'மாறுதல்களோ? என் மனம்போல அவளது குணமும் அழகும் இல்லே

என்றால் திருமணத்திற்கு நான் எப்படி சம்மதிப்பது?

இரவு புறப்பட்ட எக்ஸ்பிரஸின் வேகத்தைத் தாண்டி என் எண்ண அலைகள் ஓடிக்கொண்டிருந்தன. எல்லாம் கனகாவைப்பற்றிய கற்பனைக்கனவுகள் தாம். அந்த மாயவேகத்திலே நான் மெய் மறந்து தூங்கி விட்டேன். வண்டி சென்னை எழும்பூரை அடைந்தபோது கிழக்கு வானம் வெளுத்து வெகு நேரமாகி விட்டது. கடிதத்தில் கண்டபடி மாமா ஸ்டேஷனுக்கு வாராததைக் கண்டு மனதுக்குள்ளேயே கடிந்துகொண்டேன். எதிரேயுள்ள "வெயிட்டிங் ரூமில்" பல் விளக்கிக் குளித்து விட்டு பகட்டாக ஆடை அலங்காரம் செய்துகொண்டு கண்ணாடியில் என் தோற்றத்தைப் பார்த்து ரசித்த பின்பு தான் என் மனம் மகிழ்ச்சியில் நிறைந்தது.

காலை ஆகாரத்தை நாசுக்காக முடித்து விட்டு பிறகு பெண் வீட்டார் செய்யும் அன்பின் உபசரிப்பில் அரைகுறையாகக் கலந்து கொள்வதுதான் புது மாப்பிள்ளையின் இயல்பு என்று நினைத்துக்கொண்டே ஸ்டேஷனுக்கு எதிரேயுள்ள ஹோட்டலில் நுழைந்தேன். காலை வேளையாகையால் அங்கு ஒரே கூட்டம். என் அதிர்ஷ்டம், மூலையில் ஒரு மேஜை காலியாக இருந்தது. போய் உட்கார்ந்தேன்.

"என்ன ஸார் வேண்டும்?"—மனப்பாடம் செய்யப்பட்ட பலகாரப்பட்டியலை ஒப்புவித்தான் சர்வர்.

"ஒரு ஸ்பெஷல் நெய் தோசை—" என்று அலட்சியமாகச் சொன்னேன்.

சுடச் சுடத் தோசை வந்தது. தோசையின் நெய் மணம் என்னைக் கவர்ந்தது. எடுத்துச் சுவைத்தேன்.

"காப்பியா? டீயா? ஓவலா? என்று கேட்டுக்கொண்டே கட்டளைக்காகக் காத்திருந்தான் ஸர்வர்.

நான் யோசித்தேன். 'சே! போயும் போயும், பட்டணத்திலே கஞ்சத்தனமாய் காப்பியா சாப்பிடுவது!"

"ஒரு ஓவல் கொண்டு வாப்பா!"—நாலுபேர் காதில் விழும்படிக் கத்தினேன்.

ஓவலை ருசித்துக்கொண்டிருக்கும்போதுதான் ஒரு ரசமான சம்பவம் நடந்தது.

சுமார் பதினெட்டு வயதுடைய பெண் ஒருத்தி



பண்டைக்கால அச்சிடும் இயந்திரம்

ஹோட்டலில் ஒயிலாக நுழைந்தாள். பெண்கள் அறைக்குள் போனாள். அந்த அறையைக் குடும்பஸ்தர்கள், பிள்ளை, குட்டிகளுடன் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால் இடம் கிடைக்கவில்லை. அவளுக்கு வேறு வழியின்றி சுற்று முற்றும் பார்த்தாள். என் நல்லகாலத்திற்கோ என்னவோ, என் எதிரில் உட்கார்ந்திருந்த நபர் காப்பியைக் குடித்துவிட்டு இடத்தைக் காலி செய்தார். அதைப்பார்த்ததும் அந்தப் பெண் சிறிது நேரம் தயங்கி புதுப்பெண்ணைப்போல நாணிக்கோணி என் எதிரே உட்கார்ந்தாள். நெய்பலகாரங்களின் நறுமணத்தையும் வென்று வீசியது அவளது கூந்தலில் தவழ்ந்து வந்த பரிமளப் பூங்காற்று. அதே சமயம், அதைக் கொண்டு வா! இதைக் கொண்டு வா! என்று ஆண்கள் போடும் அதிகாரக்குரல் களையெல்லாம் மறந்து, நினைவிழந்து, அவள் அருகில் வந்த சர்வர் என்னம்மா வேண்டும்?"— என்றான்.

"பாதாம் கீர்"-இனிமையான குரலில் குளுமையான பதில் தொனித்தது.

ஒவலைக் குடித்துக் கொண்டே அவளை உன்னிப்பாகப் பார்த்தேன்.

அவளது ஐஸ்கிரீம்வண்ண மேனி; குஞ்சர்லாடு கன்னம்: கோதுமை அல்வா, அதரங்கள் எல்லாமே என் கண்களைக் கவர்ந்ததல்லாமல் உள்ளப் பசிக்கு விருந்தாகவும் இருந்தன.

சர்வர் அவளுக்குப் "பாதாம் கீர்" கொண்டு வந்து வைத்து விட்டு என் 'பில்லை' எழுதி மேஜையில் சிந்திய ஒவல்துளியில் ஒட்ட

வைத்துவிட்டுச் சென்முன். நான் பில்லை அலட்சியமாக இரண்டு விரல்களில் எடுத்துக் கொண்டு பர்ஸை எடுக்கப் பாக்கெட்டைத் தடவினேன். அவ்வளவுதான். "சுரீர்" என்ற வேதனை என் நெஞ்சைக் கவ்வியது. கையில் தேள் கொட்டியதைப் போன்ற கடுகடுப்பு காரணம்?

என் பர்ஸைக் காணேம்?

எனக்கு சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. சமாளித்துக் கொண்டு சட்டை; கோட்டு; தோல்பை, எல்லாம் துருவித்துருவித் தேடினேன். காணவில்லை. என்ன செய்வது? அப்படியே உணர்வற்று உட்கார்ந்தேன். என் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அக்கம்பக்கத்தைப் பார்த்தேன். ஒருவராவது தெரிந்தவராக இல்லை. அப்படியேயிருந்தாலும் என் விஷயம் பணப்பிரச்சினையாயிற்றே! இந்தக்காலத்தில் அதற்கு மனமுவந்து உதவி செய்பவர் யார்?

ஒரு பெண் எதிரே நான் இப்படி நிர்க்கதியாய் தவிப்பதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் வெடித்தது. கோபம் கொந்தளித்தது.

"நான் சென்ஸ்! போயும் போயும் அசலூர் ஆசாமியிடமா இந்த சோம்பேறி "பிக்பாக்கெட்" காரன் கைவரிசையைக் காட்டவேண்டும்?"—சிவப்பேறிய முகத்துடன் நான் முணு முணுத்ததை எதிரேயுள்ள பெண் கேட்டு விட்டாள். ஏதோ கேட்க யோசித்தவள் நான் கோபமாயிருப்பதைப் பார்த்து பயந்து சிறிது நேரம் மௌனமாயிருந்தாள்.

எக்கச்சக்கமான நிலையில் சிக்கிக் கொண்டு விழித்த என் கண்கள் என்னையறியாது இரண்டு முத்துப் போன்ற நீர் மணிகளை மேஜையில் உதிர்த்து விட்டன.

இதைப் பார்த்ததும் அவள் வெகு பக்குவமாகவும் பயத்துடனும் "என்ன ஸார்? பர்ஸை பிக்பாக்கெட் செய்து விட்டார்களா? பாவம்? நீங்கள் எந்த ஊர்?" என்று குழைவாகக் கேட்டாள்.

இதைக்கேட்டதும் முத்துக்கள் தெறித்திருந்த என் முகம் செயற்கை முறுவலுடன் மலர்ந்தது.

"நான் தஞ்சாவூர்க்காரன், தேனம்பேட்டையிலுள்ள என் அக்கா வீட்டிற்கு முக்

# Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. 5.)

A.C.C. CEMENTSTOCKIST

## 2, Sankari Road,

## Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத் து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

**T. M. சுப்ரமணிய ஆச்சாரி.**


இயகாரியமாகப்போகிறேன்" என்று சுருக்கமான பதில் தந்தேன்.

அந்தப் பெண் என்னை அளவிடுவதுபோல் நன்றாக நிமிர்ந்து பார்த்துக்கொண்டே என் பிள்ளையும் பார்த்தாள். உடனே என்ன நினைத்தாளோ "ஸார், உங்களுக்கு ஆட்சேபனையில்லையென்றால் நான் பணம் தருகிறேனே!" அவளது சொற்களில், அன்பு, இரக்கம், ஈகை எல்லாம் அரும்பிமலர்ந்தன.

நான் அயர்ந்தே போனேன்.

"என்ன இது? இவள் யாரோ? நான் யாரோ? சாதாரணமாய் எல்லோரிடத்திலும் காணப்படாத அன்பு இவளிடம் எப்படிப் பிறந்தது? முன், பின் அறிமுகமில்லாத இவளது அன்பு புதிராக இருக்கிறதே! ஒரு வேளை கெண்டையைப் போட்டு வராலை இழுக்கும் விலைமாதர் கதையாக இருக்குமோ?" என்மனத்தில் விதவிதமான கற்பனைகள் தளிர் விட்டன. என்ன இருந்தாலும் ஒரு அன்னியப் பெண்ணிடம் என் கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனமில்லை.

"வேண்டாம்! வேண்டாம்!! உங்களுக்கு எதற்கு சிரமம். ஓட்டல் முதலாளியிடம் விவரத்தைச் சொல்லி என்னோல் பையை வைத்து விட்டுப் போனால் போகிறது."

. . . .

"அதற்கென்ன ஸார்! ஆபத்துக் காலத்தில் யாராயிருந்தால் தான் என்ன?" என்று சொல்லிக் கொண்டே கையிலுள்ள "பில்லை" பிடுங்கிக் கொண்டு நடந்தாள்.

வேறு வழியில்லாது பேசாமல் அவள் பின்னால் சென்றேன். அங்குள்ளவர்கள் எல்லோரும், எங்கள் இருவரையும் வெறிக்க வெறிக்கப் பார்த்தனர். என் மனத்திலோ அனல் காற்று வீசியது. இருவரும் ஒரு வழியாய் வெளியே வந்தோம்.

"நீங்கள் தேனும்பேட்டை போக வேண்டுமே! இந்தாருங்கள்" என்று ஒரு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினாள்.

"எதற்கு?"

"பஸ்ஸிற்குப் பணம் வேண்டாமா?"

மறுக்க முடியாத-கூடாத-தேவைக்குக் கட்டுப்பட்டவன் போல் அந்த நோட்டை வாங்கிக் கொண்டேன்.

இவளைப்போல் பண்புள்ள பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவசரத்தில் இவளைப்பற்றி தப்புக் கணக்குப் போட்டுவிட்ட என் மனம் நன்றியதலுடன் அவளைப் பார்த்து தலை வணங்கியது.

"உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது? இந்த உபகாரத்தை நான் உயிர் உள்ளளவும் மறக்கமாட்டேன்."

"இதையெல்லாம் நான் பெரிதாக நினைக்க வில்லை, நீங்கள் தான் புகழ்கிறீர்கள்". இதைக்கேட்டதும் என் மனத்திலே ஒரு கிளு கிளுப்பு; உடலிலே புல்லரிப்பு; அவற்றின் அசைப்பிலே நான் மிதந்தேன். தவழ்ந்தேன்; மகிழ்ந்தேன். ஆனால் இவள் யார்? என்று அறிய வேண்டாமா? அவளை நன்றாக நிமிர்ந்து பார்த்தேன். அவளது அழகிய முகத்தில் விவரிக்க முடியாத களையொன்று வீசிக்கொண்டிருந்தது.

"உங்கள் பெயர்?" என்று அன்பு கனிந்த குரலில் கேட்டேன். "குணசுந்தரி!"—என்று இதழ்களில் புன்னகை தவழப் பதில் சொன்




ளுள். பெயர், பெயருக்கேற்ற குணம், அதற்கேற்ற அழகு, என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்!! நான் புகழ் மாலை சூட்டினேன், அவள் பூரித்தே போனுள்.

"ஆமாம்! இருப்பிடம் யாதோ?"

"புரைசைவாக்கம்; 3 நெ. முருகப்ப முதலித் தெரு."

ஊர், பெயர், விலாசம் எல்லாமே தெரிந்துவிட்டது. இனி இவள் உள்ளத்தையும் அறிந்துக் கொண்டால், என்னைவிட அதிர்ஷ்டசாலி உண்டா?' அதே சமயம் என் மனத்திலும் ஒரு ஆசையின் துள்ளல். குணசுந்தரி அழகாகவும் இருக்கிருள், மாசற்ற அன்புடையவளாகவும் இருக்கிருள். ஆனல் அவளது தந்தை எப்படிப் பட்டவரோ?

"அப்பாவிற்கு என்ன வேலே? எங்கு வேலே?"

இப்படி அடிக்கடி கேட்பதால் எதுவும் நினைத்துக் கொள்வாளோ என்று பயந்தேன். பயந்தபடியே நடந்துவிட்டது. "ஆமாம்! வரன் தேடும் வேலே! இந்த ஆண்களே இப்படித்தான், கொஞ்சம் இடம் கொடுத்தால் போதும் ...........ஏதோ அயலூரார்ச்சே பாவ, புண்ணியமென்று ஆபத்தில் உதவினல்...! ஊர், பெயர், குலம், கோத்திரம், ஜாதகம் எல்லாம் கேட்பீர்கள் போலிருக்கிறதே!"

அவ்வளவு வார்த்தைகளும் அவளது தளிர்கரமாக மாறி என் முகத்தில் பளீரென அறைந்தது போலிருந்தது. என்ன செய்வேன்? அவளது மனத்தைப் புண்படுத்தியதற்காக...!

(அடுத்த இதழில் முடியும்)

# நடந்தவை

## திருச்சியில் இரும்பு எஃகு சாமான் உற்பத்தியாளர் நிர்வாகக் கூட்டம்

சென்னை ராஜ்ய அயர்ன் & ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் சங்க நிர்வாகக் கூட்டம் திருச்சியிலுள்ள சங்க அலுவலகத்தில் 18—1—59 அன்று காலை 10 மணிக்கு சென்னை ஸ்ரீ K. பெருமாள் உடையார் (தொழில் ஆசிரியர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சென்னை ராஜ்யத்திலிருக்கும் பேப்ரிகேட்டர்களுக்கு, அவர்களின் கஷ்டங்களிலிருந்து விடுபட அலாட்மெண்ட் பிரத்தியேகமாக ஒதுக்கி கொடுக்கும்படி D.I.C. அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. 1959ம் வருஷம் பிப்ரவரி முதல் வாரத்தில், சென்னையில் 4வது மகாநாட்டை நடத்துவதென்றும்,

2. இம்மகாநாட்டிற்கு முதல் மந்திரி ஸ்ரீ K. காமராஜ் அவர்களையும், தொழில் மந்திரி ஸ்ரீ R. வெங்கட்ராமன் அவர்களையும் தொழில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், மற்ற சர்க்கார் அதிகாரிகளையும் அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனுப் P. H. முஹமது நஸிருத்தின் அவர்கள் நன்றி கூறியபின் இத்துடன் கூட்டம் 12-30 மணிக்கு முடிவுற்றது என்று பொதுக்காரியதரிசி. (P. H. முஹமது நஸிருத்தின் அறிவிக்கிறார்.

———

## குயப்பேட்டை கந்தசாமிகோயில் பக்தர்கள் பொதுக்கூட்டம்

சென்னை குயப்பேட்டை கந்தசாமி கோவில் தெரு 4 நெ. கட்டிடத்தில் 22—1—59 மாலை பொதுக் கூட்டமொன்று கூடியது. அதற்கு நகரசபை ஆல்டர்மனும், தொழில் ஆசிரியரு

மான ஸ்ரீ கே. பெருமாள் உடையார் தலைமை வகித்தார். அப்போது தர்மகர்த்தாக்கள் பொதுமக்களின் வழிப்பாட்டில் நோக்கம் செலுத்தி ஒற்றுமை மனப்பான்மையோடு நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தர்மகர்த்தா ஸ்ரீ கே. துரைக்கண்ணு அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஸ்ரீ எம் தியாகராஜன் ஆலயவழிப்பாட்டின் மூலம்தான் உண்மையான ஆத்ம சுத்தியையும், வாழ்க்கை வளர்ச்சியையும்அடைய முடியுமென்று பேசினார். ஆலய நிர்வாக சம்பந்தமாய் அபிப்பிராய பேதம் கூடாதென்று வற்புறுத்தினர்.

பிறகு குயப்பேட்டை ஸ்ரீ கந்தசாமி கோவில் பொது சொத்தாய் பாவிக்கப்படாமல் தனிப்பட்ட ஒருவருக்கு பாத்தியப்பட்டதென்று உரிமைப் பாராட்டுவதை எதிர்த்து நடத்தப்பட்டு வரும் வழக்கை முன்னின்று நடத்தவேண்டியது சம்பந்தமாய் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரவு 9-30 மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

## கன்னிகாபுரத்தில் ஹரிஜன வார விழா

சென்னை கன்னிகாபுரத்திலுள்ள 10 சங்கங்களின் சார்பில் ஹரிஜன பாதுகாப்பு உயர் தரப்பள்ளியில் ஸ்ரீ சித்திரவேலு எம். சி. அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் கூடியது. பள்ளித்தலைமை ஆசிரியர் ஸ்ரீ என் நமசிவாயன் அனைவரையும் வரவேற்றார். ஹரிஜன முன்னேற்றத்தைக் குறித்தும், அரசாங்கம் அவர்களுக்குக் காட்டி வரும் சலுகைகளைப் பற்றியும் தொழில் ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார், ஸ்ரீ எம், தியாகராஜன், ஸ்ரீ எம். கே. கன்னியப்பன் ஆகியோர் பேசினர். அன்று காலை 10 மணிக்கு பள்ளி மாணவர்களை குயப்பேட்டை ஸ்ரீ கந்தசாமி ஆலயத்திற்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பொதுக்கூட்டம் வந்தனோபசாரம், நாட்டுப் பாடலோடு முடிவுற்றது.

———

ஒருவரிடத்திலும் பகைமை கொள்ளாமல், யாவரிடத்தும் அன்பு பூண்டொழுகுதல் வேண்டும். —லிங்கன்.

# பேசாமடந்தை

அழகில் மயங்கினான். அவள் ஊமையென்றறிந்தபின் அறிவை இழந்துவிடவில்லை. இயற்கை செய்த வஞ்சனையை எதிர்த்து வெற்றி கண்டான். எப்படியென்பதை கதை விளக்குகிறது.

கே. பலராமன்

திரைக் காட்சியில்கவனத்தைச் செலுத்தியிருந்தபோது யாரோஎன்பக்கத்தில் உட்காருவதை உணர்ந்துத் திரும்பினேன் ஒரு கணம் அசந்து போனேன். நான் எதிர்பாராத உருவத்தை என் சமீபத்தில் கண்டு திடுக்கிட்டேன். மின்னும் நட்சத்திரமாய் என் கண்ணெதிரே ஒளிரிட்ட அவள்; ஆம், அவளேதான்.

நான் அவளை சந்தித்ததே நேற்றுதான். பிரபல கம்பெனி ஒன்றில்உத்தியோகம் செய்கிறேன். கை நிறைய சம்பளம். இவ்வளவு இருந்தும் எனக்கு வசதியான வீடு கிடைக்கவில்லை. தேடி அலைந்து ஒரு பெரிய இடமாகப் பிடித்தேன். சென்னை மாநகரின் ஜனநெருக்கமுள்ள பகுதியொன்றில் நேற்றுதான் குடியேறினோம். புதிய வீட்டில் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காகவும், அழகாகவும் அடுக்கி முடிக்கவும், மணி நாலாகவும் சரியாக இருந்தது. தாயார் தந்த காப்பியைக் குடித்து விட்டு 'ஏரியல்' கட்ட மாடிக்குச் சென்றேன். "ஏரியல்" கட்ட வந்த என்னை கன்னியொருவள் கண்டாள்; இல்லையில்லை. நான் தான் கண்டேன் அங்கே அவளை. என்னைக் கண்டதும் ஏன் தான் அப்படிவிழித்தாளோ. அவள் கண்களிலே ஏக்கம்! என் கண்களிலே இன்பம் கலந்தவொரு மயக்கம்! இரண்டும் மோதின!

"ரோஜா பூவையொத்த அவள் மேனி அழகுக்கு

அழகு செய்தது, மாலைக் கதிரவனின் மஞ்சள் வெயிலில்! அந்தக் கயல் விழியைச் சுற்றி மைதீட்டியிருந்தவிதம் தனி அழகை தந்து நின்றது அவள் அழகிய மதி வதனத்துக்கு! வில்லைப் பழிக்கும் புருவம்! புருவத்தோடு போட்டியிடும் அவள் அழகிய நாசி! செந்தாமரை இதழையொத்த அவள் செவ்விய உதடுகள்! இதழ்களின் இடையிலிருந்து ஒளி வீசும் அவள் முல்லைப்பற்கள்! ஏனோ சிரித்தாள் அந்த அழகி! நான் விழியால் விழுங்குவதை உணர்ந்த அவள் நாணத்தால் தலை குனிந்தாள். கார்மேக கருங் கூந்தலை அஜந்தா கொண்டையிட்டு அதிலே மல்லிகை மலர்சூடி, மாடிமீது மங்கையவள் நின்றிருந்த விதம் என்னை கிறுகிறுக்க வைத்தது!" ஏரியலை மறந்தேன்! என்னையும் மறந்தேன்! சூழ்நிலை மறந்தேன்! சிந்தனையும் சிதறியது. அப்போது அங்கே வந்தான் சிறுவன் ஒருவன். அவன் அவள் தம்பி தான் என்பதை உடனே உணர்ந்தேன். ஏரியல் கட்டிக்கொண்டிருந்த என்னை அவன் கேள்வி கேட்க ஆரம்பித்தான். இப்பொழுதுதான் குடிவந்தீர்களா? என்றான் அவன். தலையசைத்தேன் நான். மறுபடியும் 'என்ன செய்கிறீர்கள்'? என்றான் அவன்.

"உன்னோடு பேசிக்கொண்டுதானே இருக்கிறேன்!" என்றேன் நான்.

'அது தெரிகிறது. எங்கே என்ன வேலை செய்கிறீர்கள்?'

எனக்கும் கோபந்தான் வந்தது. நம்மைப்பற்றி விசாரிக்கும் இவன் அக்காவிடத்தில் அவசியம் கூறக்கூடும் என்றுஎண்ணினேன். மடமடவென்று பொழிந்து தள்ளினேன். என் உத்தியோகம், படிப்பு இத்தியாதி பெருமைகளை. அசந்து விட்டான் அவன். மெல்ல நான் கேட்டேன்" நீ என்ன செய்கிறாய் என்று?" படிக்கிறேன் என்றான் அவன். ம்ம்...... மெல்ல இழுத்து துணிந்து கேட்டேன் "உன் அக்காள் என்ன செய்கிறாள்?" முடிக்கவில்லை நான். அனாவசியமான கேள்வி என்று முகத்தை முறித்தாற் போல் சொல்லி விட்டு அவன் போய் விட்டான்.

சிந்தனை கலைந்தது.

இடைவேளைக்காக மணி அடிக்கப்பட்டு எல்லா

விளக்குகளும் எரியத் தொடங்கின. நேற்று ஓடிப் போனவள் இன்று என் பக்கத்தில் அமர்ந்து இருக்கிறாள். மெல்ல நோக்கினேன் அவளை. என்னை அவளும், அவளை நானும், விழியால் விழுங்கிக்கொண்டிருந்த சமயம் 'அட' 'நீங்களா என்று ஓர் குரல் எழுந்தது. அந்தக் குரல் அவள் தம்பியினுடையது. திடுக்கிட்டு நிமிர்ந்து நோக்கினேன். உள்ளம் என்னவோ படபடவென்று அடித்துக் கொண்டது, ஓர்வகை பயம், எங்கே அவன் அக்காளை என்னிடத்திலிருந்து எழுப்பி விடுவானோ என்பது தான் அந்தப்பயம்! ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் தியேட்டர் இருளில் மிதந்தது. மின்சாரம் இல்லையாம். விசில்,குழப்பம் மேலோங்கின. உள்ளுக்குள் அகமகிழ்ந்தேன். வாயார வாழ்த்தினேன் அந்த உருவமில்லா மின்சாரத்தை! என் உடலில் ஓர்வித மின்சாரம் பாய்ந்துக் கொண்டிருந்தது. அவள் காதருகில் சென்று உன் பெயர் என்ன?' என்று கேட்டேன். பதில் இல்லை. பன்முறை கேட்டும் அவள்

சிறுவர்கள் பிரம்பினால் குடும்பத்திற்குத் தேவையான சாமான்கள் தயாரிக்கின்றனர்.

வாய் மௌனம் சாதித்தது.

திடீரென்று பளபளத்தன அத்தனை மெர்க்குரி விளக்குகளும். 'பட்' என்று என் சேஷ்டைகளும் நின்றன. உடனே படமும் ஓடியது. நாங்கள் இருவரும் சினிமா பார்க்கவில்லை என்றுதான் கூறவேண்டும். ஒருவழியாக படம் முடிந்தது. தியேட்டரை விட்டு வெளியே வந்த நான் 'டாக்ஸியை' அழைத்தேன். 'டாக்ஸியா? என்ருன் அவன். ஏன் உன் அக்காவுக்கு பிடிக்காதா? என்று சொல்லி அவனைப்பார்த்தேன். தலைகுனிந்தாள் அவள்.

டாக்ஸி வந்து நின்றது. முன்பக்கம் ஏறப்போன என்னை தடுத்து அவன் ஏறிக்கொண்டான். பின் பக்கம் நானும் என் உள்ளம் கவர்ந்தவளும் ஏறினோம். அவள் ஓர் மூலையில் அமர்ந்தவண்ணம் எங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள். டாக்ஸி கிளம்பியது, அவள் தம்பி பாதையிலே கவனமாக இருந்தான். தெருவிளக்குகள் ஒன்றன் பின் ஒன்ருக ஓடிக்கொண்டிருந்தன. டாக்ஸி சில நிமிஷங்கள் ஓடி ஓர் வீட்டின் முன் நின்றது.

மீட்டரைப் பார்த்துப்பணத்தைக் கொடுத்தேன் நான். நாளை சந்திப்பதாக கூறி விடைப்பெற்ருன் அவள் தம்பி.

* * *

''சினிமாவுக்குச் சென்றிருந்தாயா?'' உணவைப் பரிமாறிக் கொண்டே கேட்டாள் என் தாய்.

''ஆமாம் அம்மா! சாயந்திரம் வந்தேன். நீங்கள் வீட்டில் இல்லை. அப்படியே சினிமாவுக்குச் சென்று விட்டேன்''

''அதற்குத்தான் காலா காலத்தில் உனக்கொரு கால் கட்டை போட்டுவிட்டால் நான் நிம்மதியாக...அவள் முடிக்கும் முன்னமே ,'என்னம்மா இதற்குள் அவசரம்'' என்று இடைமறித்தேன் என் தாயை!

''காலையில் கூட பார்த்தேன் ஒரு பெண்ணை!''

''எப்படியம்மா?'' என்றேன் நான். தாய் கூறினாள்: சிறுவயதில் என்னோடு படித்த சிநேகிதி ஒருவளை சந்தித்தேன். பக்கத்துத் தெருவில் மாமரத்தடி வீட்டில் குடியிருக்கிருள்

அவள். விருந்தி அழைத்தாள். சென்று வந்தேன்.

"மாமரத்தடி வீடா?"

"பக்கத்து தெருவில் தானே

"ஆமாம்! ஏன்?"

"ஆ!"

"என்னடா அப்படி ஆச்சர்யப்படுகிறாய்?"

"ஒன்றுமில்லை அம்மா! பிறகு...?

"பிறகு என்ன?"

"பெண் பார்க்கச் சென்றேன் என்றாயே! அது என்ன வாயிற்று?"

"அதை ஏன் கேட்கிறாய்? என் சிநேகிதிக்கு ஒரு பெண் இருக்கிறாள். அழகு என்றால் அத்தனை அழகு! ரதி, மேனகா, ரம்பை என்று கற்பனை செய்கிறார்களே அவர்களெல்லாம் அவளிடத்தில் பிச்சை எடுக்க வேண்டும். ஆனால்...

"என்னம்மா ஆனால்?"

அழகை தந்த அந்தஇயற்கை, ஒன்றைத் தர மறந்து விட்டது. அந்த சக்தி மட்டும் அவளுக்கு இருந்தால் நானேயே அவளை என் மருமகளாக்கிக் கொள்வேன்"

"நீ என்னம்மா சொல்கிறாய்?"

"புரியாது மகனே புரியாது! அழகை தந்து அதோடு அழகிய பவள வாயையும் தந்த அந்த இயற்கை அவளை பேசா மடந்தையாக்கி விட்டது.

'அம்மா'!

அலறினேன் நான்.

ஆம்! அவள் ஓர் ஊமை! பேசமுடியாமல் உணர்ச்சிகளைசெய்கை மூலம் தெரியப் படுத்தும் தங்கப்பதுமை!" ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு என் தலையை யாரோ தாக்கியதாக உணர்வு! அதுதான் போலிருக்கிறது. நான் எத்தனையோ தடவை கேட்டும் பதில் சொல்லவில்லை. என்ன செய்வாள் பாவம்! என் சிந்தனை தொடர் அறுந்தது என் தாயின் வினாவால்!

"என்னடா அப்படி சிந்திக்கிறாய்?"

"ஒன்றுமில்லை அம்மா... அவள் பெயர் என்ன?"

"வடிவழகி"

"அழகுக்கு ஏற்ற பெயர்!"

"அழகுக்கு ஏற்ற பெயரா! நீ எப்பொழுது அவளைப் பார்த்தாய்?"

"நேற்று",

"எங்கே?"

"மாடியில்!"

ம். ம்...எத்தனை அழகு இருந்தென்ன? எவன்

மணந்துகொள்வான் வாய் இல்லாதவனோ?" பெருமூச்சு விட்டாள் என் தாய். என் வாழ்வே வரண்டது போல் இருந்தது எனக்கு!

*   *   *

காலை மணி எட்டு இருக்கும். கண்ணாடிமுன் அமர்ந்து "ஷேவிங்" செய்துகொண்டிருந்தேன் நான். என் கண்கள் சிவந்து இருந்தன. இரவெல்லாம் உறக்கமேது? என் வாழ்விலே வானம்பாடியாக வந்தவள் பேச முடியாதவளாகி விட்டாளே! இனி எப்படி வாழ்வேன். இதை நினைத்தபோது என் கண்களில் குருதியே கொட்டிவிடும் போல் இருந்தது.

"இரவெல்லாம் தூங்கவில்லையா?" தாயின் குரல் கேட்டு திரும்பினேன்."

"என்னம்மா அப்படி கேட்கிறாய்?" நன்றாகத் தானே தூங்கினேன்".

அதென்னவோ அப்பா! காலா காலத்தில் உனக்கொரு கால்கட்டைப் போட்டு விட்டால் நான் நிம்மதியாக...

"அம்மா!" இடைமறித்தேன் நான்.

"பாலா! நீயோ வளர்ந்து சம்பாதிக்கவும் தொடங்கி விட்டாய். நான் இருக்கும் போதே உனக்குக் கல்யாணத்தை நடத்தி ஒரு பேரனையும் கண்டு விட்டால்...ம் ...உன் அழகுக்கும் படிப்பிற்கும் தகுந்தவளாக எங்கே இருக்கிறாளோ?......

"எனக்கு திருமணம் செய்துவைக்க ஆசைப்படுகிறாயா அம்மா!" கேள்வியை எழுப்பினேன் நான்.

"என்னடா அப்படி கேட்கிறாய்? எந்தத் தாயாவது தன் மகன் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று ஆசைப்படுவாளா?"

"அப்படியானால்......?

"என்னடா! கேள்விக் குறி போடுகிறாய்?"

"என் ஆசையை கெடுக்க மாட்டீர்களே?"

"எப்பொழுது செய்தேன் அப்படி?'

அதனால்தான் அம்மா நானும் சிந்தித்து ஓர் முடிவுக்கு வந்தேன்."

"என்ன முடிவு?"

"வடிவழகிக்கு வாழ்வளிக்கவேண்டுமென்பது என் முடிவு".

"வடிவழகிக்குவாழ்வா அறிவில்லாமல் பேசாதே! ஆசை உன் அறிவை அழித்து விட்டதா?

"அம்மா! ஆத்திரத்தால் என் வாழ்வை வீணாக்கிவிட்

டாதீர்கள். சந்தர்ப்பத்தின் காரணமாக சந்திக்க நேர்ந்த போது எங்கள் வாய் பேச வில்லை அம்மா! கண்கள் பேசி கருத்தை பரிமாறிக் கொண்டன. அப்பொழுது தெரியர்தம்மா அவள் ஊமையென்று! நான் மாத்திரமல்ல, அவளும் ஆசைக்கு அடிமையானுள். அந்த ஆசையை நான் உடைத்தெறிய மாட்டேன் அம்மா! இவற்றையெல்லாம் சிந்தித்து...

"அழகுக்கு அடிமை ஆகி விட்டாய் அப்படித்தானே?"

"தவறம்மா, தவறு! அழகு அழியக்கூடியது. பின் நீ அவளை ஏன் மணந்துக் கொள்கிருய் என்று கேட்பாய். சொல்கிறேன் கேள். இயற்கையின் வஞ்சனையால் தானே என் வடிவழகி ஊமையாக்கப்பட்டாள். இயற்கை நினைத்திருக்கும் நாம் அவள் வாழ்வை பாழ்படுத்திவிட்டோம் என்று! ஆனல் அதே இயற்கை அவள் வாழ்வதைக் கண்டு வியக்கவேண்டும். என் தாய் பதில் பேச முடியாமல் ஆனந்தக்கண்ணீர் பொழிந்தாள். அடுத்த வாரமே நானும், வடிவழகியும் கணவன், மனைவியென்ற பந்தத்தில் கட்டுண்டோம்.


# கைத்தொழில் முறை புத்தகங்கள்

**செல்வச் சுரங்கம்**

தபால் செலவு உள்பட ரூ 2—65

**தொழிலே திரவியம்**

தபால் செலவு உள்பட ரூ 1—65

முன்பணம் அனுப்பிப் பெறவும்

**கே. ஜி. ராஜா,**

16, சுப்பராய பிள்ளை தெரு,

**சென்னை-1.**


## உலகக் கோடீசுவரன்

குவாயத் நாட்டு அதிபர் தான் உலகிலேயே பெரிய கோட்டீசுவரர் என்று மதிப்பிடப்படுகிறது. அவருக்கு வருடாந்திர வருமானமாய் 140,000,000, வாரவருமானம் 3,000,000 பவுன், விநாடிக்கு 15 பவுன் வருமானம். தூங்குகிற 8-மணி நேர வருமானம் 1,40,000. இப்படிச் சேர்ந்தால் அவருக்கு ஈடான கோடீசுவரன் அவராகத் தானே இருக்க முடியும்?

கருத்துரை :

## தங்கப்பதுமை

திரைப்பட சகாப்தத்திலேயே நல்ல ஓர் திருப்பத்தை உண்டாக்கியவர்கள் ஜூபிடர் பட நிலையத்தார். அதே ஜூபிடர் பட நிலையந்தான் இந்த ஆண்டு பொங்கல் திருநாளின் கலைப் பொக்கிஷமாக ஓர் தங்கப்பதுமையை தமிழ் மக்கள் மத்தியில் உலாவ விட்டிருக்கின்றது.

கற்புத் தெய்வமாம் கண்ணகி தேவியின் வரலாற்றுக்குப் பின்பு உறையூரில் நடந்ததாகப் பின்னப்பட்ட ஓர் கற்பனைக் கருவூலந்தான் தங்கப்பதுமை கதை.

அரு. ராமனாதனின் இந்த அற்புத சிருஷ்டி தமிழ் மக்களுக்கு ஓர் அரிய கலை விருந்தாகும். கதைக்கேற்ப அவருடைய வசனங்களில் இலக்கிய நயம் வழிந்தோடுகிறது. குறிப்பாக மணிவண்ணனும் மாய மோகினியும் சந்திக்கும் கட்டத்தில் ராமனாதனின் பேனா திறம்பட வேலை செய்திருக்கிறது.

• பத்மினி படத்தின் தலைவி, பெயர் செல்வி. கண்ணகி

தேவியின் முன் தோன்றி ஆடியது முதல் இறுதியில் அதே ஆலயத்தின் மணியை ஆட்டி தேவியின் அருளைப் பெறும்வரை பத்மினியின் நடிப்பு நடிப்புக்கலைக்கே ஓர் எல்லைக் கல்லாக அமைந் திருக்கிறது. கணவனின் புரியாத போக்கைக்கண்டு கண்ணீர் விடும்போது "பெண்கள் அழுதாலே எனக்குப் பிடிப்பதில்லை" என்று மணிவண்ணன் சொன்னதும் துயரத்தால் துடிக்கும் உதடுகளிலே இன்ப நகையைத் தவழ விடுகிறாரே! அது எவ்வளவு அருமையாக தத் ரூபமாய் இருக்கிறது.

மாயமோகினியிடம் தன் பிள்ளையை அடகுவைத்து விட்டு கணவனை மீட்கும் கட்டத்தில் பத்மினி மிக அருமையாக நடித்திருக்கிறார். படம் முழுவதும் அவர் ஓர் உணர்ச்சிச் சித்திரமாக உள்ளத்தைத் தொடும் ஒளிப்பிழம்பாக காட்சி அளித்து ரஸிகர்களின் இதயத்தில் நீங்கா இடம்பெற்று விட்டார்.

பத்மினியின் கணவனாய்—மணிவண்ணனாய் திகழ்கிறார் கணேசன். கதாசிரியரின் கற்பனைக் கதாபாத்திரத்திற்கு சிறிதும் களங்கமேற் படாமல் செய்திருக்கிறார். மாயமோகினி— ராஜகுமாரி! நடிப்பில் துடிப்பு இருந்தாலும் வயதில் முதுமை தட்டுகிறதே!

ராஜமும் நம்பியாரும் வழக்கம் போல் சிரிப்பூட்டி சிந்திக்க வைக்க கலைவாணர் வருகிறார். ஆனால் நமது கலங்கும் கண்ணீருடன் இடையிலேயே மறைந்து விடுகிறார். பிறகுதான். சிரிப்பதற்குமட்டும் ராஜ கோபால் முத்துலட்சுமி ஜோடி வந்து விளையாடுகின்றனர். 'எங்கள் குல நாயகியே' என்ற கண்ணதாசனின் பாடல் நன்றாக இருக்கிறது. "என் வாழ்வில் புதுப்பாதை கண்டேன்" என்ற மருதகாசியின்பாடலை சுசீலா இனிமையாக பாடி இருக்கிறார்.

பட்டுக்கோட்டையாரின் முகத்தில் முகம் பார்க்கலாம் என்ற பாடல் நல்ல கற்பனை. பாட்டிற்குப் படப்பிடிப்பு நன்றாக அமையவில்லையே!

இறுதியில் லீலா பாடியுள்ள "பறித்த கண்களைப் பதித்துவிட்டேன்" என்ற

பாடல் உள்ளத்தைத் தொடு கிறது—கிளர்கிறது.

பாடல்களுக்குக் காட்டி லும் படத்தின் பின்னணி இசையை நன்ருக அமைத் திருக்கின்றனர் விஸ்வநா தனும், ராமமூர்த்தியும்.

ஈ. வி. சரோஜாவின் நடனம் இல்லை. கூத்து இது.

அருமையான படப்பிடி ப்பை எடிட்டர் பல இடங் களில் பழிவாங்கி இருக்கிருர். ஆனல், இந்தக் குறைகளை எல்லாம் நம் மனத்தில்

எம். எம். புரொடக்ஷன் ஸாரின் அல்லி பெற்ற பிள்ளையில், ராஜேந்திரனும் பத்மினிபிரிய தர்சினியும்

தங்காதவாறு திரு. சாமி படத்தின் சீனரியோவை யும் டைரக்ஷனேயும் மிகவும் அற்புதமாய் செய்திருக் கிருர்.

படத்தில் சில சில்லரைக் குறைகள் இருந்தாலும் பத்மினியின் அற்புதமான அருமையான நடிப்பிற்காக வும், சாமியின் டைரக்ஷனுக் காகவும் ராமனுதனின் எழில் மிகு வசனத்துக்காக வும் அவசியம் பார்க்கவேண் டிய படம் தான் தங்கப் பதுமை.

—சோ. க.

---

# உருவாகும் படங்கள்

## நான் சொல்லும் ரகஸியம்

நீண்ட நாட்களுக்குப்பின் கஸ்தூரி பிலிம்ஸாரின் நான் சொல்லும் ரகஸியம் பிப் ரவரி மாதத்தில் திரைக்கு வர விருக்கிறது. இதில் சிவாஜி கணேசன் ரிக்ஷாக் காரனுக வந்து அற்புதமாய் நடித்திருக்கிருராம். அஞ்சலி தேவி அவர் இதயங்தொடும் காதலியாக நடிக்கிருர். தமி ழகத்தின் சிறந்த நகைச் சுவை இரட்டையர்களாம் தங்கவேலும்—சந்திரபாபு வும் இதில் நடித்திருக்கின் றனர் என்ருல்நகைச்சுவைக் குப் பஞ்சமேது? பிரபல இசை அமைப்பாளரான ராமனுதனின் இனிய இசை இசை ரஸிகர்களுக்கு நல்ல தோர் விருந்தாக இருக்கு மாம். கஸ்தூரி பிலிம்ஸ் உரிமையாளர் திரு. வி. சி. சுப்பராமன் இப்படத்தைத் தயாரித்து வருகிருர்.

## மாசில்லா மாணிக்கம்

'அமரா புரொடக்ஷன்ஸ்'' என்ற படக் கம்பெனியார் 'மாசில்லா மாணிக்கம்' என்ற பெயரில் ஓர் சமூகப் படத்தை தயாரித்து வரு கின்றனர். இதில் லட்சிய நடிகர் ராஜேந்திரனும், தனித் தமிழ் நடிகை எம். என். ராஜமும் அண்ணன் தங்கை யாக நடிக்கின்றனர். மற் றும் கண்ணும்பா, ராச சுலோச்சனு, காகா ராதா கிருஷ்ணன், மனேரமா ஆகி யோர் நடிக்கின்றனர். ஆரூர் தாஸ் திரைக்கதை வசனம்

எழுதும் இப்படத்தை திருமுகம் டைரக்ட் செய்து வருகிறார்.

அண்ணன் மனம் போல-
அண்ணன் மனம் போல
அருமை குணம் போல
அமையாதே அமையாதே
அவனியிலே'

என்று எம். என். ராஜத்துக்காக ஒரு பாட்டு பதிவ்ரகியதை ராகம் பாடுவது போல் அன்றையப் படப்பிடிப்பு வாகினியில் நடந்தது குதிரை லாயம் ஒன்று. வெள்ளைக் குதிரை என்று சோகமே உருவானதுபோல் நின்று கொண்டிருந்தது. அந்தக் குதிரைக்குச் சொந்தக்காரரான சகஸ்ரநாமம் அதனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

## அல்லி பெற்ற பிள்ளை

'ராஜா! அல்லிக்கு குழந்தை பிறந்திருக்கு ராஜா! அல்லிபெற்ற பிள்ளை அழகான ஆண் குழந்தை!'' என்று சொன்னார். உடனே குதிரை கண்ணீர் வடிக்க ஆரம்பித்தது. அதைப் பார்த்த சகஸ்ரநாமமும் வேதனையுடன், ஏன் ராஜா அழறாய்! ஆண் குழந்தை பிறந்து விட்டதே இனிமேல், நம்மை எங்கே கவனிக்கப் போறாங்கன்னு அழறியா?'' என்று அவர் கேட்டதும் குதிரை ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டிக்கொண்டே முன்னால் இரண்டு அடி எடுத்து வைத்தது. இதற்குள் டைரக்டர் சோமு கட் கட் என்றார். இந்தக் காட்சி மிகவும் உருக்கமாகவே இருந்தது.

ஆமாம்! எம். எம். புரொடக்ஷன்ஸார் தயாரிக்கும் ''அல்லி பெற்ற பிள்ளை'' என்ற படத்தின் படப்பிடிப்புத்தான் சமீபத்தில் பாரமவுண்ட் படப்பிடிப்பு நிலையத்தில் நடைபெற்றது. இதில் டாங்கா வாலாவாக சகஸ்ரநாமமும், அவருடைய மகனை ராஜேந்திரனும் நடிக்கின்றனர். மற்றும் எம். என். ராஜம், பண்டரிபாய், ராமசாமி முதலியோர் நடிக்கின்றனர். இந்தியில் வெளிவந்த 'டாங்காவலி' என்ற முக்ரம் சர்மாவின் கதையைத் தழுவி திரு. கலைஞர் ஏ. பி. நாகராஜன் திரைக்கதை அமைத்துள்ளார். வசனமும் அவரே. சோமு டைரக்ட் செய்யும் இப்படத்தின் இசை அமைப்பைப் பாகஸ்தர்களில் ஒருவரான மகாதேவனே செய்து வருகிறார்.

## கடன் வாங்கிக் கல்யாணம்

விஜயா புரொடக்ஷன்ஸாரின் கடன் வாங்கிக் கல்யாணம் இம்மாதம் (ஜனவரி 30உ தமிழகமெங்கும் பவனி வருகிறது. பிரபல திரைப்பட ஜோடிகளான சாவித்திரி, கணேசன் இதில் முக்கிய பாகத்தில் நடிக்கின்றனர். நகைச்சுவை விருந்தளிக்க தங்கவேலு ராமச்சந்திரன் முதலியோர் பெரும் பங்கு எடுத்திருக்கின்றனர். கேவா கலரில் எடுக்கப்பட்டுள்ள ஈ. வி. சரோஜாவின் அற்புத நடனம் ரஸிகர்களுக்கு தெவிட்டாத ஓர் கலைவிருந்தாகும்; இந்த ஆண்டின் தலைசிறந்தப் படமாக விளங்கப்போகும் இந் நகைச்சுவைப்படத்திற்கு ரஸிகர்களின் இதயத்தில் நீங்கா இடம் கொண்டுள்ள தஞ்சை ராமையா தாஸ் வசனமும் பாடல்களும் எழுதி இருக்கிறார். பிரபல டைரக்டர் பிரசாத் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார் என்றால் படத்தின் வெற்றிக்கு கேட்கவா வேண்டும்? நாகி ரெட்டியும் சக்ரபாணியும் சேர்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது கடன் வாங்கிக் கல்யாணம்.

## குழந்தைகள் பிலிம் காட்சி

குழந்தைகள் பிலிம் சொஸைட்டி சார்பில் 16—1—59 மாலை 5 மணிக்கு சென்னை மவுண்ட் ரோடிலுள்ள டிசென்டரில், டெல்லி குழந்தைகள் பிலிம் சென்டர் பொதுக்காரிய தரிசி ஸ்ரீ மகேந்திரநாத் முன்னிலையில் பத்திரிகையாளர் கூட்டமொன்று நடைபெற்றது. ஆரம்பத்தில் தேநீர் விருந்து நடைபெற்றது. பத்திரிகையாளர் அபிப்பிராயம் அறிவதற்கென்றே கூட்டப்பட்ட அக்கூட்டத்தில் பிலிம் டைரக்டர் ஸ்ரீ கே. சுப்ரமண்யம் குழந்தைகளுக்கான படங்கள் தயாரிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி விரிவாகப் பேசினார். ஸ்ரீ மகேந்திரநாத் கூட்டத்திற்கு விஜயம் செய்து சிறப்பித்த பத்திரிகையாளர்க்கும், குழந்தைகளுக்கான படத்தைத் தயாரித்து உதவிய டைரக்டர் ஸ்ரீ கே. சுப்ரமண்யம் அவர்கட்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அன்றிரவு குழந்தைகளுக்கான படக்காட்சி திரையிடப்பட்டது.

## மச்சம்!—அதுதான் மிச்சம்

சமீபத்தில் தனம் (சுசிலாவை) சந்திக்க நேர்ந்தது. அவர் அப்போதுஒருவரிடம் தன் கையைக் காண்பித்து ரேகை சாஸ்திரம் பார்த்துக்

கொண்டிருந்தார். ரேகை பார்த்துக் கொண்டிருந்தவர் அவர் (தனம்) கையிலுள்ள மச்சத்தைப்பார்த்து "இதென்ன மச்சமா?" என்று கேட்டார். அதற்கு அவர், "ஆமா அதுதான் மிச்சம்" என்று சட் என்று முறுவலித்துக் கொண்டே சொன்னார். கூடி இருந்தோர் எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

மோராக் ஸ்ரீவிவாஸ் பிலிம்ஸாரின் பாண்டித்தேவனில் ராஜசுலோசனாவின் இன்ப நடனம்

தமிழ்நாடு ... 600 003

பேசும்போதே நகைச் சுவையைக் குழைத்துப் பேசுவதில் குறிப்பிட்ட இல நடிகைகளில் திருமதி தனமும் ஒருவர். நல்ல தமிழ் நடிகை. கோவை தந்த சொ தமிழ் பாவையான இவரும் இவருடைய தங்கை சுசீலாவும் சென்னை மாம்பலத்தில் இருக்கின்றனர். நல்ல நடிப்புத்திறனும், கூர்மையான அறிவும் உள்ள இவருக்கு விரையில் திருமணமும் ஆகப்போகிறது. திருமணத்திற்குப் பிறகும் தொடர்ந்து நடிப்பீர்களா என்று நான் கேட்டபோது, "தொடர்ந்து நடிப்பேன்" என்றார்.

எல்லோரிடமும் நன்கு பழகும் குணமும்; கலங்கமில்லா இதயமும் கொண்ட இவர் விரைவில் நட்சத்திரப் பதவியை அடைவார் என்பது உண்மை.

Edited & Published by .K. Perumal Udayar,
55, Edapalayam Street. Madras-3. Asst. Editor : K.G.RAGU.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, EdapalayamSt., Madras-3.

# K. P. பரசுராம் பிள்ளை & சன்ஸ்

ஹார்டுவேர் வியாபாரம்,

இரும்பு எஃகு சாமான் பேப்ரிகேட்டர்கள் :

## கோவை ஜில்லா "ஈஸ்ட்ராலா" பாட்டரி விற்பனை ஏஜண்டுகள்.

## " தி மெட்ராஸ் பேன்சி ஸ்டோர்ஸ் "

எல்லா பேன்சி சாமான்களும்
மொத்தமாகவும், சில்லரையாகவும்
சரசமாய் கிடைக்கும்.

Regd. No. M. 7007 THOZIL 1—2—59


# M. KANNAN

Government Approved
Fabricator and Contractor
(Regd. 10)

30, WALL TAX ROAD, MADRAS-3.

★

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken
Specialist in Arc and Gas welding
Stainless Sleel, Aluminium Gas Cutting
works are also undertaken.

OUR MOTTO IS TO
SATISFY OUR CUSTOMERS


ANANDA PARVATHI PRESS, MADRAS-3